Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு+II

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TRAVELS

MANOJ EXPRESS

The Finest Express Service in the Field

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும் பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்

இல. 32, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.

(பொலிஸ் நிலைய வீதி, யாழ்ப்பாணம்)

021 222 3916, 0777 801038

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 புரட்டாதி- 08 ஹிஜ்ரி 1428 சஃபான் 19 (24.09.2005) சனிக்கிழமை இதழ்:359

## தனிமையில் இருந்த வயோதிபப் பெண்ணை அடித்துக்கொன்றுவிட்டு பணம் நகைகள் திருட்டு!

### கொக்குவிலில் பட்டப்பகலில் சம்பவம்

யாழ்ப்பாணம் —

தனிமையில் இருந்த வயோதிபப் பெண் ஒருவரை உலக்கையால் தலையில் தாக்கிக் கொன்றுவிட்டு நகை, பணம் என்பன கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் கொக்குவில் பகுதியில் நேற்று பட்டப்பகலில் இடம்பெற்றது.

நேற்று பகல் 2.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கொக்குவில் மேற்கைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் புனிதவதி (வயது 62) என்ற வயோதிபப் பெண்ணே திருடர்களின் தாக்குதலில் உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்வம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

மேற்படி வீட்டுக்குள் பட்டப்பகலில் புகுந்த திருடர்கள் அங்கு தனிமையில் இருந்த வயோதிபப் பெண்ணை தலையில் உலக்கையால் அடித்துக் கொன்றுவிட்டு அவர் அணிந்திருந்த நகைகளைக் களைந்ததுடன் (12 ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலை சோதனைச்சாவடியில் யாழ். பல்கலை மாணவன் கைது!

யாழ்ப்பாணம் —

முகமாலை சோதனைச் சாவடியில் வைத்து இராணுவத்தினரால் யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவன் ஒருவர் நேற்றுக் காலை 7.45 மணியளவில் கைது செய்யப்பட்டார்.

எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு தொடர்பாக பளைப் பிரதேசத்திற்குச் சென்றுவிட்டு மீள திரும்பி வந்த வேளையே இவர் கைது செய்யப்பட்டார்.

புலிச் சின்னம் பொறிக்கப்பட்ட இலக்கத் தகடொன்றை குறித்த மாணவர் வைத்திருந்ததாலேயே கைது செய்யப்பட்டதாக தெரிவித்த இராணுவத்தினர் சிங்கள மொழியிலான கடிதம் ஒன்றில் கையொப்பமிடுமாறு மாணவனை அச்சுறுத்தினர்.

மாணவர் கைது தொடர்பாக கேள்வியுற்ற பல்கலைக் கழக மாணவர்கள் யாழ்.மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டபின்னர் முகமாலை சோதனைச் சாவடிக்கு சென்று மேற்படி மாணவனை விடுதலை செய்யுமாறு கோரினர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சோதனைச் சாவடிக்கு வருகை தந்த பொதுமக்களும் மேற்படி மாணவனை விடுதலை செய்யுமாறு கோரியதுடன் தமது பயணங்களையும் நிறுத்திக் கொண்டனர்.

இதையடுத்து இராணுவத்தினரதும், பொலிஸாரதும் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் கைது செய்யப்பட்டமாணவனை பல்கலை மாணவர்கள் மீட்டுவந்தனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தத்தைத் தூண்டும் செயற்பாட்டில் தென்னிலங்கை அரசியல் நகர்வுகள்!

## கொழும்பு, வவுனியாவில் தமிழர்கள் இருவர் கைது!

கொழும்பு —

கொழும்பிலும் வவுனியாவிலும் தமிழர்கள் இருவர் சந்தேகத்தின் பேரில் படையினராலும் பொலிஸாராலும் நேற்று கைதுசெய்யப்பட்டனர்.

வவுனியா விமானப்படைத் தளத்திற்கு அண்மித்த பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடினார் எனத் தெரிவித்து வவுனியா - புதுக் குளத்தைச் சேர்ந்த எஸ்.அருள்வாசம் (வயது 36) என்பவரை கைதுசெய்த படையினர் மேலதிக விசாரணைகளுக்காக இவரை வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

கொழும்பிலுள்ள பாதுகாப்பு அமைச்சுக் கட்டடத்திற்கு அண்மித்த பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியதாகத் தெரிவித்து முல்லைத்தீவு - கற்குழியைச் சேர்ந்த

## லண்டன் ‘தமிழ்க்கார்டியன்’ தெரிவிப்பு

லண்டன் —

சர்வதேச சமூகத்தின் சமாதான முன்னெடுப்புக்களை மீறி இலங்கையின் அரசியல் நிகழ்வுகள் சென்றுகொண்டிருக்கின்றன. சிங்களத் தீவிரவாதிகள் தென்னிலங்கையின், பிரதான அரசியல் சக்திகளாக உருவெடுத்துள்ளனர். இலங்கையின் சிறுபான்மை சமூகத்தினரும், சர்வதேச சமூகத்தினரும், அமைதி முயற்சிகளின் எதிர்நிலைக்கு தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அத்துடன், தென்னிலங்கையின் அரசியல் நிகழ்வுகளும், சிங்களத் தீவிரவாதிகளும், யுத்தத்தைத் தூண்டும் வகையில் செயற்பட்டு வருவதாக லண்டனிலிருந்து வெளியாகும் தமிழ் கார்டியன் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்தப் பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது- இலங்கைக்கு உதவிவழங்கும் இணைத்தலைமை நாடுகளான அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், நோர்வே ஆகிய நாடுகள்

## இளைஞர்கள் இருவர் கொழும்பில் கடத்தல்!

கொழும்பு —

கொழும்பு - ஆமர் வீதிச் சந்தியில் வெள்ளை வானில் வந்த இனந்தெரியாத ஆயுதபாணிகள் இரண்டு இளைஞர்களை கடத்திச் சென்றனர்.

நேற்று முற்பகல் 11 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. ஓட்டோ ஒன்றை மறித்து அதில் சென்றுகொண்டிருந்த இளைஞனை கைவிலங்கிட்டதுடன் ஓட்டோ சாரதியையும் சேர்த்து வானில் ஏற்றிச் சென்றனர்.

வெள்ளை வானில் வந்தவர்கள் துப்பாக்கிகளை வைத்திருந்ததாகவும் இவர்கள் ஏன் ஓட்டோவில் வந்தவர்களை கடத்திச் சென்றனர் என்பதும் கடத்தப்பட்டவர்கள் யார் என்பது குறித்த விபரம் எதுவும் தெரியவரவில்லை.

அண்மைக் காலமாக கொழும்பில் பல

## கொழும்பு, வவுனியாவில் தமிழர்கள் இருவர் கைது!

கொழும்பு —

கொழும்பிலும் வவுனியாவிலும் தமிழர்கள் இருவர் சந்தேகத்தின் பேரில் படையினராலும் பொலிஸாராலும் நேற்று கைதுசெய்யப்பட்டனர்.

வவுனியா விமானப்படைத் தளத்திற்கு அண்மித்த பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடினார் எனத் தெரிவித்து வவுனியா - புதுக் குளத்தைச் சேர்ந்த எஸ்.அருள்வாசம் (வயது 36) என்பவரை கைதுசெய்த படையினர் மேலதிக விசாரணைகளுக்காக இவரை வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

கொழும்பிலுள்ள பாதுகாப்பு அமைச்சுக் கட்டடத்திற்கு அண்மித்த பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியதாகத் தெரிவித்து முல்லைத்தீவு - கற்குழியைச் சேர்ந்த சரவணன் விஜிதரன் (12 ஆம் பக்கம் பார்க்க)

## லண்டன் 'தமிழ்க்கார்டியன்' தெரிவிப்பு

லண்டன் —

சர்வதேச சமூகத்தின் சமாதான முன்னெடுப்புக்களை மீறி இலங்கையின் அரசியல் நிகழ்வுகள் சென்றுகொண்டிருக்கின்றன. சிங்களத் தீவிரவாதிகள் தென்னிலங்கையின், பிரதான அரசியல் சக்திகளாக உருவெடுத்துள்ளனர். இலங்கையின் சிறுபான்மை சமூகத்தினரும், சர்வதேச சமூகத்தினரும், அமைதி முயற்சிகளின் எதிர்நிலைக்கு தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அத்துடன், தென்னிலங்கையின் அரசியல் நிகழ்வுகளும், சிங்களத் தீவிரவாதிகளும், யுத்தத்தைத் தூண்டும் வகையில் செயற்பட்டு வருவதாக லண்டனிலிருந்து வெளியாகும் தமிழ் கார்டியன் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்தப் பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது- இலங்கைக்கு உதவிவழங்கும் இணைத்தலைமை நாடுகளான அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், நோர்வே ஆகிய நாடுகள் இலங்கைத்தீவின் அமைதி முயற்சிகள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞர்கள் இருவர் கொழும்பில் கடத்தல்!

கொழும்பு —

கொழும்பு - ஆமர் வீதிச் சந்தியில் வெள்ளை வானில் வந்த இனந்தெரியாத ஆயுதபாணிகள் இரண்டு இளைஞர்களை கடத்திச் சென்றனர்.


நேற்று முற்பகல் 11 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. ஓட்டோ ஒன்றை மறித்து அதில் சென்றுகொண்டிருந்த இளைஞனை கைவிலங்கிட்டதுடன் ஓட்டோ சாரதியையும் சேர்த்து வானில் ஏற்றிச் சென்றனர்.

வெள்ளை வானில் வந்தவர்கள் துப்பாக்கிகளை வைத்திருந்ததாகவும் இவர்கள் ஏன் ஓட்டோவில் வந்தவர்களை கடத்திச் சென்றனர் என்பதும் கடத்தப்பட்டவர்கள் யார் என்பது குறித்த விபரம் எதுவும் தெரியவரவில்லை.

அண்மைக் காலமாக கொழும்பில் பல தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வாக்களிப்பு நிலையங்கள் இல்லை!

### தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு



கொழும்பு —

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட மாட்டாதென தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க அறிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

தேர்தலில் 13.3 மில்லியன் மக்கள் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர். கடந்த ஆண்டு பொதுத்தேர்தலைவிட 4 லட்சத்து 28 ஆயிரத்து 128 புதிய வாக்காளர்கள் இம்முறை வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர்.

சுனாமியால் இடம்பெயர்ந்தவர்கள், உயிரிழந்தவர்களின் விபரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளது.

இடம்பெயர்ந்த மக்கள் வாக்களிப்பதற்கென தபால் திணைக்களம் மற்றும் கிராமசேவகர்களின் உதவியுடன் வாக்காளர் அட்டை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்தவர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வந்து தமது வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக்கொள்ளு மாறு ஒலிபெருக்கி மூலம் அழைக்கப்படுவர். பாதுகாப்புக் காரணங்களுக்காக விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதி களில் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படமாட்டாது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## நவம்பர் 8 இல் வரவு-செலவுத்திட்டம்!

கொழும்பு —

ஜனாதிபதித் தேர்லை எதிர்கொள்ள வேண்டிய சூழல் உள்ளபோதிலும் - எதிர்வரும் நவம்பர் 8 ஆம் திகதி முழுமையான வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

வரவு - செலவுத்திட்டம் தொடர்பான மசோதா ஒன்று அடுத்தமாதம் 4 ஆம் திகதி நாடாளுமன்றில் முன்வைக்கப்படும். இந்த வரவு - செலவுத்திட்டத் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவப் பேச்சாளராக பிரிகேடியர் நலின் விதாரண!



கொழும்பு —

இலங்கை இராணுவத்தின் ஊடகப் பணிப்பாளராகவும் ஊடகப் பேச்சாளராகவும் பிரிகேடியர் நலின் விதாரண பொறுப்பேற்றுள்ளார்.

இராணுவப் பேச்சாளராகப் பதவி வகித்த தயா ரட்ணாயக்க ஆசிய பசுபிக் வலய புலனாய்வு மற்றும் பாதுகாப்பு தொடர்பிலான உயர் கல்வியைப் பெறுவதற்காக இன்று ஹவாய் செல்கிறார்.

பிரிகேடியர் தயா ரட்ணாயக்கவுடன் இராணுவ அதிகாரிகளான பிரிகேடியர் லெனார்ட் மார்க், பிரிகேடியர் லால் பெரேரா ஆகியோர் ஹவாய் செல் (12 ஆம் பக்கம் பார்க்க)



# மாணவரை, மக்களை அச்சுறுத்துவதன் மூலம் இராணுவம் எதனையும் சாதித்துவிட முடியாது!

## யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியம்

யாழ்ப்பாணம்

நேற்றுக் காலை 7.45 மணியளவில் முகமாலை இராணுவ சோதனைச் சாவடியூடாக யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவனை இராணுவத்தினர் கைதுசெய்ததுடன், தேவையற்ற முறையில் அவரைக் கடுமையான சோதனைக்கு உட்படுத்தியுள்ளனர். இராணுவத்தினரின் இத்தகைய செயற்பாட்டை பல்கலைக்கழக மாணவர்கள் வன்மையாகக் கண்டிப்பதாக யாழ்.பல்கலைக்கழ மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய சமாதான சூழ்நிலை தேக்கமடைந்து, எவ்வேளையிலும் போர் வெடிக்கும் என்ற நிலையில் மக்கள் வாழ்கின்ற சூழலில், வன்முறையற்ற முறையில் அமைதியாக எமது அபிலாஷைகளை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்தும் நோக்கோடு பல்கலைக்கழ மாணவர்களாகிய நாம் முன்னெடுக்கின்ற பொங்கு தமிழ் -2005 நிகழ்வை திட்டமிட்டு குழப்பும் நோக்கோடு இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் செயற்பட்டமையானது மாணவர் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது எனக் குறிப்பிடும் அந்த அறிக்கையில்

பல்கலைக்கழ மாணவர்களையோ, மக்களையோ இவ்வாறு அச்சுறுத்துவதனூடாக எப்பயனையும் இராணுவத்தினர் அடைந்துவிட முடியாது. மாறாக நெருக்கடிக்குள்ளான சமாதான முயற்சிகள் மேலும் சீர்குலைந்து யுத்தத்திற்கான வழியையே இது உருவாக்கும் என்பதை இராணுவத்தினரும், அரசும் உணர்ந்து கொள்ள வேண்டும். எனவே இத்தகைய செயற்பாட்டை இராணுவத்தினர் நிறுத்த வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பல்கலைக்கழக மாணவன் கைது செய்யப்பட்டமையை வன்மையாகக் கண்டிப்பதாக தமிழ் மாணவர் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தொண்டர்களை சிற்றூழியர்களாக சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சை

யாழ்.மாவட்டத்தில் சுகாதார தொண்டர்களாக பணியாற்றுபவர்களைச் சிற்றூழியர்களாக சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 28 ஆம் திகதி தொடக்கம் 4 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. 722 தொண்டர்களுக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ரீதியாக அந்தந்தப் பிரதேசத்தில் பின்வரும் திகதிகளில் குறிப்பிட்ட நிலையங்களில் நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளதாக பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

28 ஆம் திகதி பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலும், 29 ஆம் திகதி மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலும், 01 ஆம் திகதி சுன்னாகம் பொது நூலகத்திலும், 02 ஆம் திகதி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, கோப்பாயிலும், 03 ஆம் திகதி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, ஊர்காவற்துறையிலும், 04 ஆம் திகதி சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மற்றும் யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பணிமனையிலும் நேர்முகப் பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

இந்த நேர்முகப் பரீட்சைக்கான அனுமதிக் கடிதங்கள் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளில் வழங்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நுண்கலைப் பட்டதாரிகள் போராட்டம் 2 ஆவது நாளாகவும் தொடர்ந்தது!

யாழ்ப்பாணம்

யாழ்.பல்கலைக்கழக நுண்கலை இசை, நடன டிப்ளோமா பட்டதாரிகள் தமக்கு நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்குமாறு கோரிக்கை விடுத்து மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையின் முன்பாக நடத்திவரும் மறியல் போராட்டம் நேற்று இரண்டாம் நாளாகத் தொடர்ந்தது.

வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் பட்டதாரி பயிலுநர் சேவையிலும், பட்டதாரி ஆசிரியர் நியமனத்திலும் தாம் புறக்கணிக்கப் பட்டிருப்பதுடன், தம்மைப் போன்ற டிப்ளோமா பட்டதாரிகளுக்கு வடக்கு கிழக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இதைவிட பட்டம் பெறாத பட்டதாரிகளுக்கும் ஆசிரியர் நியமனம் வழங்கப் பட்டுள்ளது எனக் குறிப்பிட்ட நுண்கலைப் பட்டதாரிகள்-

இதற்கமைய தமக்கு ஆசிரியர் நியமனம் வழங்குவதில் வடகிழக்கு மாகாணகல்வி அமைச்சு முறைகேடாக நடந்துள்ளதெனவும், தமக்கு தகுந்த தீர்வு வழங்கப்படவேண்டும். தீர்வு கிடைக்காதபட்சத்தில் தமது போராட்டத்தை விஸ்தரிக்கப்போவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

# பாடசாலைக்கு காணி கொள்வனவு!

மானிப்பாய்

சங்கானை அ.மி.த.க.பாடசாலை அமைந்துள்ள காணியோடு அருகிலுள்ள 10 1/2 பரப்பு விஸ்தீரணமுள்ள தனியார் காணி ரூபா 11,50000 ற்கு பாடசாலைக்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 50 வருடங்களுக்கு மேலாக இரண்டு பரப்புக் காணியில் கட்டட வசதிகள், மைதானம் போன்றவை இல்லாது பெரும் சிரமங்களின் மத்தியில் இந்தப் பாடசாலை இயங்கி வந்தது. இக்காணியைக் கொள்வனவு செய்வதன் மூலம் இவற்றை நிவர்த்தி செய்வதற்கு வாய்ப்புக் கிட்டியுள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்தார். இப்பகுதியைச் சேர்ந்த வெளிநாட்டில் வதிவோரின் அன்பளிப்புத் தொகையாலும் , அதிபரின் பெரும் முயற்சியின் காரணமாகவும் இந்தக் காணியை பாடசாலை கொள்ளவனவு செய்யதுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விசேட கலந்துரையாடல்

உடற்கல்வி ஆசிரிய நியமனம் பெற்ற அனைத்து ஆசிரியர்களுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று பி.ப 2.30 மணிக்கு வேம்படி பாடசாலைக்கு அண்மையாகவுள்ள 167 ஆம் இலக்க இல்லத்தில் நடைபெறவுள்ளது என உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

உடற்கல்வி ஆசிரியர்களுக்கான நியமனம் தரம்3 II இலேயே வழங்கப்பட்டுள்ளது. இதனை ஆசிரியர் சங்கம் தரம் 3 Iஇற்கு மாற்றுவதற்கு அனுமதி பெற்றுள்ளது.

எனவே உடற்கல்வி ஆசிரிய நியமனம்பெற்ற ஆசிரியர்கள் உடற்கல்வி டிப்ளோமா சான்றிதழுடன் மேற்படி விசேட கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

# குப்பி விளக்கு பற்றியதால் மாணவி காயமடைந்தார்!

நெடுந்தீவு

குப்பி விளக்கின் மூலம் பற்றிய தீயினால், மாணவி ஒருவர் கடுமையான தீக்காயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 12 ஆம் வட்டாரம் நெடுந்தீவைச் சேர்ந்த சகாயநேசன் - வேர்ஜினி (வயது15) என்ற மாணவியே தீக்காயங்களுக்கு இலக்கானவராவார்.

குப்பி விளக்கில் படித்துக் கொண்டிருந்த மாணவி, எரிந்து கொண்டிருந்த நிலையிலிருந்த விளக்கிற்கு எண்ணெை விட்ட வேளை திடீரென மாணவி மீது தீப்பற்றியதில், அவரின் கை, கழுத்து, முகம் என்பன தீக்காயங்களுக்கு இலக்கானது. இதனையடுத்து இவர் நெடுந்தீவு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (113)

# விண்ணப்பம் கோரல்!

யாழ்ப்பாணம்

அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் நடத்தும் இளம்சைவப்புலவர் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

சைவப்புலவர் தேர்வில் கலந்து கொள்ளவுள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் அனுப்பும்படி அகில இலங்கை சைவப் புலவர் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

பாடவிதானம் தொடர்பான விண்ணப்பப் படிவங்களை சங்கப் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

# 'ஈரமில்லா இதயம்' நூல் வெளியீடு

சுன்னாகம்

தம்பித்துரை எழுதிய 'ஈரமில்லா இதயம்' நூல் வெளியீட்டு விழா சுன்னாகம் கதிரமலைச் சிவன்கோவில் தேவஸ்தான திருமண மண்டபத்தில் இன்று பி.ப 3 மணிக்கு சிவஸ்ரீ சி.சரவணபவான் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சிவாகம கலாநிதி சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள் ஆசியுரையையும், வ.குமாரசாமி, பல்கலைக் கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா ஆகியோர் வாழ்த்துரையையும், யாழ்.பல்கலைக்கழக சமூக அரசறிவியல்துறைத் தலைவர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் வெளியீட்டுரையையும், தமிழ்த்துறை விரிவுரையாளர் ஈ.குமரன் மதிப்பீட்டுரையையும் நிகழ்த்தவுள்ளனர்.

## பொங்குதமிழ் எழுச்சி வாரம்

யாழ்ப்பாணம்

யாழ்.மாவட்டத்தில் இன்று முதல் எதிர்வரும் 30 ஆம் திகதிவரை பொங்குதமிழ் எழுச்சிவாரமாக பொங்கு தமிழ் ஏற்பாடுக் குழு பிரகடனப்படுத்தியுள்ளது.

தமிழ்த் தேசியத்தையும், தமிழீழ விடுதலைப்புலிகளையும் சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்து வவுனியா பிரகடனத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில் பொங்கு தமிழ் ஏற்பாட்டு நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. இதற்கமைய எதிர்வரும் 30 ஆம் திகதி யாழ். மாவட்டத்தில் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு நடைபெறவுள்ளது.

எனவே இன்றிலிருந்து எதிர்வரும் 30 ஆம் திகதி வரை பொது மக்கள் தமது இல்லங்களின் முன்பாகவும், பாடசாலைகள், தனியார் கல்வி, நிறுவனங்கள் வர்த்தக நிலையங்கள் என்பவற்றிலும் சிவப்பு, மஞ்சள் கொடிகளை பறக்கவிட்டு தமது எழுச்சியை மக்கள் காட்டவேண்டும் என பொங்குதமிழ் ஏற்பாட்டுக் குழு கேட்டுள்ளது.

# பொங்குதமிழ் குறித்த விளக்கவுரைகள்!

யாழ்ப்பாணம்

எதிர்வரும் 30 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பொங்கு தமிழ் பிரசாரத்தில் பலாலி ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவர்கள் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

இதில் கடந்த வாரம் வடமராட்சி பகுதியிலுள்ள பாடசாலைகள், பிரதேச செயலகங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் விளக்கவுரைகளை மேற்கொண்டு வந்ததோடு, கடந்த செவ்வாய்க்கிழமை ஊர்காவற்துறை, தம்பாட்டி, நாரந்தனைப் பகுதிகளில் அப்பகுதி கூட்டுறவுச் சங்கங்களின் உதவியுடன் வீடு வீடாகச் சென்று விளக்கவுரை வழங்கினர்.

அத்துடன் வலிகாமம், தென்மராட்சிப் பகுதிகளிலும் தமது பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றனர். (12)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
மணிகண்டன், சிம்ரன், ஜெய்ஆகாஷ் மற்றும் பலர் நடித்த
கிச்சா வயது 16
காட்சிகள் : 10.30, 2.30, 5.30, 9.30 (பு.நே)

மனோகரா யாழ்ப்பாணம்
(இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு)
சிம்பு, கோபிகா மற்றும் பலர் நடித்த
தொட்டி ஜெயா
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 5.30, 9.30

நிறைஞ்சனாஸ் சங்கானை
விக்ரம்,சதா, விவேக் மற்றும் பலர்நடித்த
அந்நியன்
காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

நாகம்ஸ் சுன்னாகம்
ரவிகிருஷ்ணா, கோபிகா, பிரகாஷ்ராஜ், ரேவதி மற்றும் பலர் நடித்த
பொன்னியின் செல்வன்
25ஆம் திகதி முதல்
ஒரு நாள் ஒரு கனவு
காட்சிகள்:- 11.00,3.00, 7.00,10.00 (பழைய நேரம்)

ராஜா யாழ்ப்பாணம்
3 ஆவது ஜனத்திரள் வாரம்
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு -
நியூ புகழ் -
எஸ்.ஜே.சூர்யா, நிலா

அன்பே ஆருயிரே
இசை - A.R. ரகுமான்
ரிக்கற் முற்பதிவு செய்து கொள்ளலாம்
பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

# நமது ஈழநாடு

## மூன்றாம் ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்படும் கலை - இலக்கிய போட்டிகள்

நமது ஈழநாடு பத்திரிகையின் மூன்றாம் ஆண்டு நிறைவையொட்டி கலை - இலக்கியப் போட்டிகளை நடத்துவதற்கு தீர்மானித்திருப்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

### போட்டிகளுக்கான விதிகள்

**சிறுகதை மற்றும் கவிதைப்போட்டி**

- படைப்புக்கள் யாவும் படைப்பாளியின் சுய ஆக்கமாக இருத்தல் வேண்டும். மொழிபெயர்ப்புக்கள் நிராகரிக்கப்படும்.
- சிறுகதை யாவும் தெளிவான எழுத்தில் எழுதப்பட்டோ தட்டச்சு செய்யப்பட்டோ இருத்தல் வேண்டும். கையெழுத்தில் 7 பக்கங்களுக்குள்ளும் தட்டச்சில் 6 பக்கங்களுக்குள்ளும் இருப்பது நல்லது.
- கவிதைகள் மரபுக்கவிதையாகவோ அல்லது புதுக்கவிதையாகவோ இருக்கலாம். எதுவானாலும் 20 முதல் 50 வரிகளுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்கள் யாவும் சமகால சமூகவியல் - வாழ்வியல் பிரச்சினைகளை மையமாகக் கொண்டவையாக இருத்தல் வேண்டும்.

குறிப்பு:- இந்தப் போட்டிகளில் நமது ஈழநாடு நிறுவன ஊழியர்கள் எவரும் பங்குபற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

**பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி**

மேற் பிரிவு

தலைப்பு – தமிழ் மாணவர்களின் கல்வியும்... வெகுசனத் தொடர்பு ஊடகங்களும்.

மத்திய பிரிவு

தலைப்பு – தமிழ் மாணவர்களும் வாசிப்புப் பழக்கமும்

### நிபந்தனைகள்

- கட்டுரைகள் சொந்த ஆக்கமாக இருத்தல் வேண்டும்.
- கட்டுரைகள் அனுப்பும் போது பாடசாலையில் கற்கும் தரம் குறிப்பிடப்பட்டு அதிபரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
- கட்டுரைகள் ஆகக்குறைந்தது 1500 சொற்களுக்கு குறையாமலும் 2000 சொற்களுக்கு மேற்படாமலும் இருத்தல்வேண்டும்.
- கட்டுரையை தேர்ந்தெடுப்பதில் நடுவர் குழுவினது தீர்ப்பே இறுதியானது.

ஆக்கங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 25.09.2005

போட்டிக்கான ஆக்கங்கள் அனுப்பவேண்டிய முகவரிகள்:

கலை இலக்கிய கட்டுரைப்போட்டி
"நமது ஈழநாடு"
267 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

நமது ஈழநாடு பணிமனை
யாழ்.சாலை
கிளிநொச்சி.


டிஜிற்றல் போட்டோ கொப்பி
$A_4$ - கறுப்பு வெள்ளை - 3.00 ரூபா
$A_4$ - கலர் - 40.00 ரூபா
(சி/4609)
மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்
62/16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# போர்நிறுத்த ஒப்பந்த மீறலுக்கு வழிவகுக்கும் அவசரகாலச் சட்டத்தைக் கைவிடவேண்டும்!

## இரா.சம்பந்தன் தெரிவிப்பு



கொழும்பு—

யுத்த நிறுத்த ஒப்பந்த மீறலுக்கு வழிவகுக்கும் அவசரகாலச் சட்டத்தைக் கைவிடவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை அவசரகாலச்சட்ட நீடிப்பு விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

லக்ஷ்மன் கதிர்காமர் கொல்லப்பட்டதையடுத்து அவசரகாலச்சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அந்தக் கொலை வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. இது புலனாய்வுத்துறையின் தோல்வியை வெளிக்காட்டும் சம்பவம்.

அவசரகாலச்சட்டத்தின் பெயரால் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைகள் அதிகரித்து வருகின்றன. கொழும்பு போன்ற நகரங்களில் நுழைகின்ற தமிழர்களிடம் பாரிய அளவில் சோதனைகள் நடத்தப்படுகின்றன. பதிவு செய்து விட்டுதான் உள்ளே நுழையும் நிலை இருக்கிறது.

இந்த அவசரகாலச் சட்டம் தமிழ் மக்களுக்கு எதிராகத்தான் பயன்படுத்தப்படுகிறது என்பதை நாம் அனைவரும் நன்கறிவோம்.

இந்தச் சட்டமானது தமிழ் மக்களின் கண்ணியத்தின் மீதும் சுய மரியாதையின் மீதும் நிகழ்த்தப்பட்டு வருகின்ற தாக்குதல். இந்தச் சட்டத்தின் கீழ் தமிழ் மக்களை மனிதாபிமானமற்ற முறையில் நடத்தி வருகின்றனர். அவசர காலச்சட்டம் தொடர்ந்தால் இத்தகைய சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இந்தச் சட்டம் யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்கு எதிரானது.

மக்கள் பெருந்தொகையாக வாழும் பிரதேசங்களில் இயல்பு வாழ்க்கையை மேற்கொள்வதற்காக சோதனைச் சாவடிகளை அகற்றவேண்டும் என்றுதான் யுத்த நிறுத்த ஒப்பந்தம் கூறுகிறது. ஆனால், அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி தமிழர் பெரும்பான்மையாக வாழும் மாவட்டங்களில் புதிய சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு வருவது அப்பட்டமான யுத்தநிறுத்த மீறலாகும்.

இந்தச் சூழல் சகித்துக் கொள்ள முடியாதது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறோம். படைத்தரப்பின் கீழ் நிலையிலுள்ளவர்கள் அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி சட்டத்தை தங்கள் கையில் எடுத்துக் கொண்டு எந்தக் கேள்வியும் கேட்பாரற்ற நிலையில் மோசமாகச் செயற்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் தொடர்ந்தும் அவசர காலச்சட்டத்தை நீடிப்பதை அரசாங்கம் கைவிட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# எரிவாயு சிலிண்டர் வெடித்து 38 பேர் காயம்!

கொழும்பு—

அவிசாவளை - திவிஹம்பிட்டிய பகுதியில் சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்று வெடித்ததில் 38 பேர் காயமடைந்தனர்.

இரும்பு வர்த்தகர் ஒருவர் கொள்வனவு செய்த இரும்புகளுடன் லொறியில் ஏற்றுவதற்காக சிலிண்டர் ஒன்றையும் சேர்த்து வைத்திருந்தார். இதன்போது சிலிண்டர் வெடித்ததில் இவர்கள் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# நீதியாகவும், சுதந்திரமாகவும் தேர்தலை நடத்த முடியாத நிலை!

## தயானந்த திஸநாயக்க தெரிவிப்பு

கொழும்பு—

ஜனாதிபதித் தேர்தலை சுதந்திரமாகவும், நீதியாகவும் நடத்துவதில் சிக்கல் நிலை தோன்றியிருப்பதாகத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்தார். இந்த வருடம் ஜனாதிபதித் தேர்தலை நடத்துமாறு மேல்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை மறுபரிசீலனை செய்யுமாறு தாக்கல் செய்துள்ள மனுவிலேயே தேர்தல் ஆணையாளர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலை இந்த வருடமே நடத்துமாறு உத்தரவிடவேண்டுமெனக் கோரி ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் ஒமல்பே சோபித தேரர் தாக்கல் செய்திருந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட மேல் நீதிமன்றம் அவருக்குச் சார்பாகத் தீர்ப்பளித்திருந்தது.

எனினும், தீர்ப்பை வழங்கிய ஐந்து நீதியரசர்கள் அடங்கிய குழு ஒமல்பே சோபித தேரரின் மனித உரிமைகளை மீறும் விதத்தில் தேர்தல் ஆணையாளர் செயற்பட்டதாகக் கூறியிருந்தனர். மேல் நீதிமன்றம் இவ்வாறு கூறியுள்ளமையானது வாக்காளர்கள் தன்மீது வைத்துள்ள நம்பிக்கையைக் குறைக்கும் விதத்தில் அமைந்திருப்பதாகவும், இந்த நிலையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை சுதந்திரமாகவும், நீதியாகவும் மேற்கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகவும் அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை மறு பரிசீலனை செய்யவேண்டுமெனவும் தேர்தல் ஆணையாளர் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# விடுதலைப் புலிகளுடன் சந்திப்பா? ஜயலத் ஜயவர்த்தன மறுப்பு!

மட்டக்களப்பு—

மட்டக்களப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளை தான் சந்திக்கவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்தார்.

அண்மையில் அமரபுர மகாநாயக்கர், நாகதீப விகாரையின் தலைமைப்பீடாதிபதி ஆகியோருடன் மட்டக்களப்புக்கு சென்றிருந்த ஜயலத் ஜயவர்த்தன, விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்ததாகக் கூறப்பட்டது.

அவரின் மட்டக்களப்பு பயணத்தின்போது ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையே இரகசிய ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் குற்றம்சாட்டியிருந்தார்.

இது குறித்து அவர் விளக்கமளிக்கையில் -

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நான் இரகசிய சந்திப்புக்கள் எதையும் நடத்தவில்லை. முன்னைய பயணங்களில் அவர்களைச் சந்தித்தது உண்மைதான்.

தற்போதைய மட்டக்களப்பு பயணத்தின்போது சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களையும், மதத் தலைவர்களையுமே நான் சந்தித்தேன். எமது சந்திப்புக்கள் குறித்து மட்டக்களப்பு படைத்தரப்பு தலைமையகம் அனைத்தையும் அறிந்தே இருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதிக்குள் நாம் செல்லவே இல்லை.

நாகதீப விகாரையின் பீடாதிபதியும், கத்தோலிக்க ஆயரும் மட்டுமே விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதியான கரடியனாறு பிரதேசத்துக்கு சென்றதாகவும் ஜயலத் ஜயவர்த்தன கூறினார்.(01)

# பிரதமர் மகிந்த இதுவரை சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவைப் பெறவில்லை!

## டி.எம்.ஜெயரட்ண தெரிவிப்பு



கொழும்பு—

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ இன்னமும் சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளவில்லை என கட்சியின் மூத்த உறுப்பினர் அமைச்சர் டி.எம்.ஜெயரட்ண தெரிவித்தார்.

எனினும், மூன்று முஸ்லிம் கட்சிகள் தமது ஆதரவை மஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கியுள்ளன.

சிறுபான்மைக் கட்சியினரின் வாக்குகள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தீர்க்கமான முடிவை மேற்கொள்ளும் வலிமையைக் கொண்டவை என்பதை அவர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

சிறுபான்மையினரின் வாக்குகளைக் கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன தமது ஆதரவு தொடர்பாக இன்னமும் முடிவுகளை அறிவிக்கவில்லை.

இந்த நிலையில் அவற்றின் ஆதரவைப் பெற்றுக்கொள்ள இரண்டு பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களும் முயற்சித்து வருவதாகக் கூறப்படுகிறது. (01)

# வன்முறைகள் இடம்பெற்றால் மறு வாக்குப்பதிவு நடத்தப்படும்

## தேர்தல் ஆணையாளர்

கொழும்பு—

வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறும் தேர்தல் வாக்குச் சாவடிகளில் மறுவாக்குப் பதிவு நடத்தப்படும் என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்தார்.

தேர்தல்கள் செயலகத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற ஊடக மாநாட்டில் இந்தக் கருத்தை அவர் வெளியிட்டார்.

எதிர்வரும் நவம்பர் 17 ஆம் திகதி நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலின்போது வாக்குமோசடிகள் இடம்பெற்றால், நவம்பர் 19 ஆம் திகதி குறித்த வாக்குச் சாவடிகளில் மறுவாக்குப் பதிவு நடத்தப்படும்.

கடந்த பொதுத் தேர்தலைக் காட்டிலும் இந்த ஜனாதிபதித் தேர்தலில் 4 லட்சத்து 28 ஆயிரத்து 128 பேர் மேலதிகமாக வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கொத்தணி வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதி வாக்காளர்களுக்கான வசதிகள் செய்துகொடுக்கப்படவுள்ளன.

போர்நிறுத்த உடன்படிக்கையின் பின்னர் படையினர் சீருடையுடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் செல்லமுடியாது என்பதன் காரணமாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

எனினும், வாக்குச்சாவடிகளை அமைக்கும் பணிகள் தொடர்பாக தனித்து தீர்மானம் எடுக்கமுடியாது.

பாதுகாப்புப் படையினரும், தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்களுமே அதனைத் தீர்மானிப்பர்.

இந்த நிலையில் வாக்களிப்பதற்கான அடையாளத்துக்காக அடையாள அட்டைகள் கட்டாயப்படுத்தப்படுமா என்பது குறித்து தம்மால் எதுவும் கூற முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (01)

# திரைப்பட இயக்குநர்களுக்கு அச்சுறுத்தல்: சுதந்திர ஊடக அமைப்பு கண்டனம்!

கொழும்பு—

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக திரைப்படம் தயாரித்த திரைப்பட இயக்குநர்களுக்கு படைத்தரப்பு மற்றும் ஊடகத்துறை சார்ந்த சிலரால் விடுக்கப்பட்டிருக்கும் அச்சுறுத்தலுக்கு சுதந்திர ஊடக அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சுதந்திர ஊடக அமைப்பினர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

போருக்கு எதிராக திரைப்படம் எடுத்த அசோக ஹந்தகம, பிரசன்னா விதானகே, சுதத் மகாதிவுல்வெவ மற்றும் விமுக்தி ஜயசுந்தர ஆகியோரை செப்ரெம்பர் 14 ஆம் திகதியிட்ட ஆங்கிலம் ஊடகம் ஒன்று மிகக் கடுமையாக விமர்சனம் செய்துள்ளது.

வெளிநாட்டு நிதியுதவியுடன் திரைப்படம் எடுக்கப்பட்டிருப்பதாகவும், இது ஒரு புதிய பயங்கரவாதம் என்றும் அவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்த நான்கு இயக்குநர்களுமே தங்களது படைப்புக்காக சர்வதேச நாடுகளில் அங்கீகரிக்கப்பட்டவர்கள். இவர்களில் இரண்டு இயக்குநர்களை அண்மையில் சந்தித்த இராணுவத்தின் மூத்த அதிகாரிகள் மிக மோசமான முறையில் அவர்களை விமர்சித்துள்ளனர்.

இந்தச் சந்திப்புக்களையடுத்து அவர்கள் மிகவும் அச்சத்துடன் உள்ளனர்.

இனப்பிரச்சினை தொடர்பாக கருத்துக்களை வெளியிடுகின்ற கருத்துச் சுதந்திரம் படைப்பாளிகளுக்கு உண்டு.

ஊடகத்துறை உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் அந்த திரைப்பட இயக்குநர்களின் கருத்துச் சுதந்திரத்தை மதிக்க வேண்டும்.

இந்தக் கருத்துச் சுதந்திரத்தை பாதுகாக்க அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அதில் வலியுறுத்தியுள்ளனர்.

### பாடசாலைமட்ட துடுப்பாட்ட போட்டி;

# சென்.ஜோன்ஸ், மத்திய கல்லூரி அணிகள் அரையிறுதிப் போட்டியில் வெற்றிபெற்றன!





யாழ்ப்பாணம் —

வடக்கு-கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் நடத்தும் பாடசாலைகளுக்கிடையிலான 30 ஓவர்கள் கொண்ட தோல்பந்து கிரிக்கெட் போட்டியின் ஓர் அங்கமாக யாழ். மாவட்டத்திலிருந்து 14 பாடசாலை அணிகள் பங்குபற்றிய சுற்றுப் போட்டியின் நேற்று முன்தினம் நடைபெற்ற அரையிறுதியாட்டங்களில் சென்.ஜோன்ஸ், மத்திய கல்லூரி அணிகள் வெற்றிபெற்று இறுதியாட்டத்திற்கு தகுதிபெற்றன.

இதன் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி மோதியது. இந்த ஆட்டம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி அணி, சென்.ஜோன்ஸ் கல்லூரி வீரர்களின் பந்து வீச்சுக்கு முகம்கொடுக்க முடியாமல் 23 ஓவர்கள் முடிவில் 53 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் கனகரூபன் 16, கஜிந்திரன் 9, சிவதாஸ் 3 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பாக கரிஷன் 4, சஞ்ஜீவன், நவஜீதன் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 14.3 ஓவர்களில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 57 ஓட்டங்களைப் பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.

துடுப்பாட்டத்தில் நேசவர்மன் 18, கிரிசாந் 10, சயிந்தன் 9 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் கனகரூபன் 2, சுதர்சன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

மற்றைய அரையிறுதிப் போட்டியில் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி ஆடியது. இவ்வாட்டம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய மத்திய கல்லூரி அணி 30 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 140 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் தயான் 31, மகிபன் 25, சுதர்சன் 22 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி சார்பாக பார்த்தீபன் 3, வினோத் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடி மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 24.5 ஓவர்களில் 92 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதனால் மத்திய கல்லூரி அணி 48 ஓட்டங்களால் வெற்றிபெற்று, இறுதியாட்டத்திற்கு தகுதிபெற்றது.

துடுப்பாட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி சார்பாக பார்த்தீபன் 25, தினேஸ் 16, வினோத் 8 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் மத்திய கல்லூரி அணி சார்பாக நவனீத் 3, தயான், வியாசன் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

## உதைபந்தாட்ட போட்டி

யாழ்ப்பாணம் —

நவக்கிரி எல்லாளன் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மயிலங்காடு இளம் தென்றல் விளையாட்டுக் கழக அணியும்,

4.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் நவசக்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென்.மைக்கல் விளையாட்டுக்கழக அணியும் மோதவுள்ளன.

## விளையாட்டு

### ஜனசக்தி சுழல்கிண்ண உதைபந்தாட்டம்

# வதிரி பொமேர்ஸ் - மனோகரா அணிகள் இறுதிப் போட்டியில் இன்று மோதல்!



பொமேர்ஸ் அணியினர்



மனோகரா அணியினர்

பருத்தித்துறை —


பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் ஜனசக்தி சுழல்கிண்ணத்திற்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு டயமன்ஸ் மைதானத்தில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் உபதலைவர் மா.நவநீதமணி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த இறுதியாட்ட நிகழ்விற்கு முன்பதாக நடைபெறவுள்ள காட்சிப் போட்டியில், ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இளவாலை யங்கென்றீஸ் விளையாட்டுக் கழகமும்,

இறுதிப் போட்டியில் வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மனோகரா விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

(12)

## சன்பீஸ்ட் ரெனிஸ் போட்டியில் சானியா ஜோடி அரையிறுதிக்கு



கொல்கத்தா —

முன்னணி வீராங்கனைகள் பங்கேற்றுள்ள சன்பீஸ்ட் ஓபன் ரெனிஸ் போட்டி கொல்கத்தாவில் நடைபெற்று வருகிறது. இதன் ஒற்றையர் பிரிவு 2ஆவது சுற்று ஆட்டங்கள் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதன் ஒரு ஆட்டத்தில் தரவரிசையில் 13ஆவது இடத்தில் உள்ள ரஷ்ய வீராங்கனை அனஸ்டாசியா மிஸ்கினா தனது சகநாட்டு வீராங்கனையான கவினாவாஸ்கோ போயிவாவுடன் மோதினார். இந்த ஆட்டத்தில் மிஸ்கினா 6-0, 6-1 என்ற நேர் செட்டில் வெற்றிபெற்று காலிறுதி போட்டிக்குள் நுழைந்தார்.

மற்றொரு ஆட்டத்தில் இந்திய வம்சாவழியான அமெரிக்க வீராங்கனை சுனிதாராவ், எலீனா லித்கோட்சவா (ரஷ்யா)வுடன் மோதினார். இதில் சுனிதாராவ் 3-6, 1-6 என்ற நேர் செட்டில் தோல்வியடைந்தார்.

மற்றைய ஆட்டங்களில் சோபியா (சுவீடன்), அன்ட்டோனிலாவை (இத்தாலி) 6-2, 6-1 என்ற கணக்கிலும், பாமர் (ஒஸ்ரியா), கமரினை (இத்தாலி) 1-6, 7-6, 6-3 என்ற கணக்கிலும் தோற்கடித்து காலிறுதி போட்டிக்கு முன்னேறினர்.

இரட்டையர் பிரிவில் நடைபெற்ற காலிறுதியாட்டம் ஒன்றில் சானியா மிர்சா (இந்தியா), ரூனோபாஸ்கல் (ஸ்பெயின்) ஜோடி, கஸ்டல்வி, சுனிதாராவ் (அமெரிக்கா) ஜோடியுடன் மோதியது.

இதில் சானியா ஜோடி 6-1, 6-3 என்ற நேர் செட்டில் எளிதாக வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

மற்றொரு ஆட்டத்தில் இந்திய ரெனிஸ் இரட்டை சகோதரிகளான ரேகா-சிகா ஒபராய் ஜோடி 6-4, 6-2 என்ற நேர் செட்டில் ஜஸ் (தைலே), புஜிவரா (ஜப்பான்) ஜோடியை வென்று அரையிறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.

## சிம்பாப்பே டெஸ்ட் தொடரில்

# 21 விக்கெட்டுக்களை வீழ்த்தி இர்பான் பதான் உலக சாதனை!



ஹராரே —

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவர் இர்பான் பதான். அவர் பந்துவீச்சில் மட்டுமன்றி தற்போது துடுப்பாட்டத்திலும் சிறப்பாக ஆடி ஓட்டங்களைக் குவித்து சகலதுறை ஆட்டக்காரராக மாறியுள்ளார்.

சிம்பாப்வேக்கு எதிரான டெஸ்ட் தொடரைக் கைப்பற்ற அவரது சிறப்பான பந்துவீச்சே காரணமாக அமைந்தது. அவர் புலவாயோவில் நடந்த முதல் டெஸ்டில் 9 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

கடைசி டெஸ்டில் முதல் இனிங்ஸில் 7 விக்கெட்டுக்களும், 2ஆவது இனிங்ஸில் 5 விக்கெட்டுக்களுமாக மொத்தம் 12 விக்கெட்டுக்களை வீழ்த்தி அணியின் எளிதான வெற்றிக்கு வழிவகுத்தார். பதான் சிம்பாப்வேக்கு எதிரான 2 டெஸ்ட் போட்டி கொண்ட இந்தத் தொடரில் 21 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி உலக சாதனை படைத்துள்ளார்.

இதற்கு முன்பு இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் இங்கிலாந்து வீரர் ஜோன் பிரிங்ஸ், தென்னாபிரிக்க அணிக்கு எதிராக நடந்த டெஸ்ட் போட்டியில் 21 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இந்தச் சாதனையை அனில் கும்ளே 1999ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் சமன் செய்தார். தற்போது இர்பான் இவர்கள் இருவரின் சாதனையையும் சமன் செய்துள்ளார்.


இது தொடர்பாக பதான் கூறியதாவது -

போட்டி முடிவடைந்ததும் அணியில் உள்ள சில வீரர்கள் நான் சாதனையை சமன் செய்துள்ளதாக கூறினார்கள். பந்துவீசும்போது சாதனையை நினைத்து செயற்படுவதில்லை. சிறப்பாக ஆடி விக்கெட்டுக்களைக் கைப்பற்றினால் சாதனைகள் தானாக முறியடிக்கப்படும்.

இந்தத் தொடரில் சிறப்பாகப் பந்துவீசினேன். துடுப்பாட்டத்திலும் ஓட்டங்களைக் குவித்துள்ளேன். எனினும், பந்துவீச்சில்தான் அதிக கவனம் செலுத்துவேன். பல ஆண்டுகளுக்கு பின்பு வெளிநாட்டில் தொடரை வென்றது மகிழ்ச்சியாக உள்ளது.

இதுவரை நம் நாட்டில் அதிக ஆட்டங்களில் நான் ஆடவில்லை. இது எனக்கு மிகப்பெரிய சவாலாக உள்ளது. இந்தியாவில் சிறப்பாக ஆடி விக்கெட்டுக்களைக் கைப்பற்ற வேண்டும். இதற்காக என்னைத் தயார்படுத்தி வருகிறேன். இதற்கு கடுமையாக உழைப்பேன்.

கடைசி டெஸ்டில் அதிக பிடிகளைத் தவறவிட்டோம். இதனால் பந்துவீச்சாளர் சோகமடைந்தால், ஆட்டத்திலுள்ள கவனம் பாதிக்கப்படுமெனத் தெரிவித்தார்.



# அணித்தலைவர் பதவியிலிருந்து கங்கூலியை நீக்க வேண்டும்!

## சப்பல் கிரிக்கெட் சபைக்கு கடிதம்

புதுடெல்கி —

கங்கூலி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி ஒருநாள் போட்டிகளில் தொடர்ந்து மோசமாக ஆடி வருகிறது. அவருடைய ஆட்டமும் பலருக்கு எரிச்சலை ஏற்படுத்தியுள்ளது.

இந்தநிலையில், இந்திய அணி சிம்பாப்வேயில் சுற்றுப் பயணம் செய்வதற்காக கடந்த மாதம் மும்பையில் இருந்து கிளம்பியது. அப்போது கப்டன் கங்கூலி உட்பட சில வீரர்கள் தாமதமாக வந்தனர்.

இதனால் ஆத்திரமடைந்த பயிற்சியாளர் சப்பல் வீரர்கள் மீது கடுமையான கோபமடைந்தார். மேலும், கப்டன் இல்லாமல் சப்பலே நிருபர்களைச் சந்தித்தார். இது கங்கூலிக்கு கோபத்தை உண்டாக்கியது. அப்போதே இருவருக்குமிடையே மோதல் ஆரம்பித்தது. அதன் பின்பு சிம்பாப்வேக்கு எதிரான முதல் டெஸ்டில் இந்தியா வெற்றி பெற்றதும் சப்பல், கப்டன் பதவியில் இருந்து தன்னை விலகுமாறு வற்புறுத்தியதாக கங்கூலி பரபரப்பாகக் குற்றம் சாட்டினார்.

இந்தநிலையில், சப்பல் இந்திய கிரிக்கெட் சபைக்கு 6 பக்கம் கொண்ட கடிதம் ஒன்றை பரபரப்பாக எழுதியுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது -

கங்கூலி பயிற்சியின்போது தீவிரமாகச் செயற்படுவதில்லை. சிம்பாப்வேக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தின் போது அவர் காயமடைந்தார். இதற்கு சிகிச்சைபெற ஸ்கான் செய்துகொள்ளுமாறு கூறியதை அவர் ஏற்கமறுத்துவிட்டார். அதன்பின்பு சிறிது நேரம் கழித்து களமிறங்கி துடுப்பாட்டம் செய்தார்.

கப்டன் பதவிக்காக அவர் அணியில் பிளவை உண்டாக்குகிறார். உடல் அளவிலும், மனரீதியிலும் கங்கூலி கப்டன் பதவிக்கு தகுதியில்லாதவர்.

மேற்கிந்தியத் தீவுகளில் 2007ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி சிறப்பாக ஆடி வெற்றிபெற வேண்டுமானால், கங்கூலியை அணியிலிருந்து நீக்கவேண்டும். அவரது இடத்திற்கு புதிதாக கப்டன் ஒருவரை உடனடியாக நியமிக்க வேண்டுமென சப்பல் அந்தக் கடிதத்தில் கூறியுள்ளார்.

இது தொடர்பாக இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் ரன்பீர்சிங் மகேந்திரா கூறுகையில் -

சப்பலிடமிருந்து கடிதம் வந்துள்ளது உண்மைதான். இது ரகசியமானது. அதில் என்ன தெரிவித்துள்ளார் என்பதை வெளியில் கூறமுடியாதெனத் தெரிவித்தார்.

# சுயநலம் ஒருபோதும் உதவாது



ஒரு காட்டில் நந்து என்ற குரங்கு இருந்தது. அது மரங்களின் உயர்ந்த கிளைகளில் பாய்ந்து பாய்ந்து, கனிகளைப் பறித்து உண்டது. அது தனக்குள் சந்தோஷப்பட்டது. அதனால் தற்பெருமை உடைய தாய் இருந்தது. அடுத்தவருக்கு உதவி செய்வதற்கு அது விரும்பவில்லை.



மீனு என்ற இன்னொரு குரங்கு தனது குட்டியை மிகவும் அன்போடு வளர்த்து வந்தது. அதற்கு அறிவுள்ள நல்ல கதைகளைச் சொல்லிக் கொடுத்தது. அடுத்தவருக்கு உதவவேண்டுமென்று அடிக் கடி புத்திசொல்லிவந்தது.

ஒருநாள் குட்டிக்குரங்கு வேட்டைக்காரன் விரித்த வலையில் அகப்பட்டுவிட்டது. தப்பமுயற்சி செய்து முடியவில்லை. தாயைக்கூப்பிட்டுத் தனது நிலையைத் தெரிவித்தது. தாயும் கவலையுடன் அதை விடுவிக்க முயற்சி செய்தது முடியவில்லை.

மீனு, நந்துவைச் சந்தித்து விடயத்தைச் சொன்னது. தனது குட்டியை மீட்க உதவுமாறு கேட்டது. அதற்கு நந்து, "உனது மகன் கவனமாக இருந்திருக்க வேண்டும். ஆனால், இது அவனுக்கு ஒரு பாடமாக இருக்கும்" என்று கூறியது. உதவவிரும்பவில்லை.



மீனு திரும்பிச் சென்று தனது குட்டி அகப்பட்ட வலையைச் சிறிது சிறிதாக அறுத்து, அதிலிருந்து குட்டியை மீட்டது.

சிலநாட்களின்பின் வேட்டைக்காரன் வைத்த இரும்புப் பொறியொன்றில் நந்து காலை வைத்து, அகப்பட்டுக் கொண்டது. அதனால் பெருஞ்சத்த மிட்டது. அந்த வழியால் வந்த மீனு இதைப் பார்த்தது. உடனே உதவிக்கு ஓடியது. தனது குட்டி ஆபத்தில் இருந்தபோது, மீனு உதவில்லை என்று எள்ளளவும் அது சிந்திக்கவில்லை. தனது முயற்சியால் பொறியிலிருந்து நந்துவை மீட்டது. நந்து சந்தோஷமடைந்தது. "மீனு நீ எனக்கு உதவியதை நன்கு உணர்ந்துகொண்டேன். என்னை மன்னித்துவிடு" என்று நாணத்தோடு கூறியது. அன்றிலிருந்து அவற்றோடு அன்பாகவும், உதவியாகவும் வாழ்ந்து வந்தது.



# ஆபத்தைத் தவிர்த்துக்கொள்ளலாம்

சாப்பாட்டுக் கடையொன்றில் வேலைசெய்து கொள்ளும் ஒருவர் தனது மகனுக்குச் சொன்னார். தம்பி! எந்த இடத்திலாவது வேலைசெய்யும்போது இருமலோ, அல்லது தும்மலோ வரலாம். அந்த வேளையில் நாம் சில முன்னாயத்தங்கள் செய்யவேண்டிவரும். எம்முன் பலர் இருக்கலாம். அப்போது நாம் அவர்களின் பார்வைக்கு விலகி, எதிர்ப்புறத்தை நோக்கித் திரும்பி, கைகளால் மறைத்தபடியே இருமலாம்; அல்லது தும்மலாம்.

சிலவேளை நாம் கைகளில் கத்திபோன்ற ஆயுதங்களைப் பாவித்துக்கொண்டிருந்தால், அவற்றை உடனடியாகக் கீழே வைத்துவிடவேண்டும். இல்லையெனில் அவை எமக்குக் காயங்களை ஏற்படுத்தக் காரணமாகலாம்" எனக்கூறிக் கொண்டிருந்தவர், நினைவில் நின்ற ஒரு விடயத்தைத் தெரிவித்தார்.

"என்னுடன் வேலைசெய்துகொண்டிருந்த இளைஞன் ஒருவர், கத்தியால் காய்கறிகளை வெட்டிக் கொண்டிருந்தார். திடீரெனத் தும்மல் வந்துவிட்டது. கையிலிருந்த கத்தியினால் மறு கையை வெட்டிக் கொண்டார். உடனே கத்தி தவறி மேசையிலிருந்து வீழ்ந்ததால், காலிலும் காயத்தை ஏற்படுத்திவிட்டது.



அவரை உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று அங்கு சிகிச்சையளிக்கப்பட்டது. அவர் இந்த முன்னேற்பாட்டைத் தெரிந்திருந்தால், இந்த ஆபத்தைத் தவிர்த்துக்கொள்ளலாமல்லவா" எனத் தனது மகனுக்கான அனுபவப் பாடத்தைப் புகட்டினார் அந்தப் பொறுப்புமிக்க தந்தை.





சிறுவர் அரங்கம்

# துருவன்

## வால்ட் டிஸ்னியின் "டிஸ்னி லாண்ட்"



வாழ்ந்து காட்டியவர்கள் பெரியவர்கள்
வாழப்போகின்றவர்கள் சிறியவர்கள்
வாழ்ந்தவர்களின் வாழ்வில் இன்பங்கள் வந்தன
துன்பங்களும் வந்தன. எல்லாமே போயின
வாழப்போகிறவர்களின் வாழ்வில்
இன்பங்கள் வரலாம்-
துன்பங்கள் வரலாமா? வர விடலாமா?

இதைத்தான் - 50 வருடங்களின் முன் வாழ்வின் வசந்தத்தை வரைந்து காட்ட முனைந்தார் வால்ட் டிஸ்னி.

சிறியவர், பெரியோர் என்ற பேதமின்றி எல்லோரினதும் வாழ்வில் வசந்தத்தை ஏற்படுத்த "டிஸ்னி லாண்ட்" என்ற பொழுதுபோக்குப் பூங்காவை ஆரம்பித்தார்.

இந்தப் பூங்காவைப்போன்று இன்று ஐந்து பூங்காக்கள் உலகில் உருவாக்கப் பட்டுள்ளன.

குழந்தைகளின் மேல் வால்ட் டிஸ்னி கொண்டிருந்த அன்பின் வெளிப்பாடாகவே இவை வளர்ந்து கொண்டிருக்கின்றன.

டிஸ்னிலாண்ட் ஆரம்பித்து பத்து ஆண்டுகளுக்குள் 5 கோடிக்கு மேற்பட்டவர்கள் இதில் நுழைந்திருக்கிறார்கள் என்றால் அதன், வசிகரம் எத்தகையது என்பது விளங்கும்.

இந்தப் பூங்காவில் வெவ்வேறு பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. அந்தந்தப் பிரிவுகளுக்குள் அவை சார்ந்த சகல உணர்வுகளையும் பெறக்கூடியதாக அவை அமைக்கப்பட்டுள்ளமை சிறந்த ஆக்கத்திறனாகும்.

நாட்டுப் பற்றுள்ள ஒவ்வொருவரும் எமது நாட்டிலும் இத்தகைய சிறப்புப் பூங்காக்களை அமைக்க வேண்டுமென, சிறார்களின் உணர்வுகளை மதிக்க வேண்டுமென நினைத்தால் செய்ய முடியாமலா போய் விடும்.



# உங்கள் கைவண்ணம்



வ. முருகானந்தன்
தரம் - 07
யாழ்/சந்திரமௌலீசா வித்தியாலயம்.




ம. றஜிதா
தரம் - 07
யா/மல்லாகம் மகாவித்தியாலயம்.



மு. நிபிதா
தரம் - 03
யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம்.

ச. றாமேஸ்வர்
தரம் - 05
சென்ஜோன்ஸ் கல்லூரி.





ம. மயூரி
தரம் - 11
யா/பண்டத்தரிப்பு மகளிர் உயர் கல்லூரி.



# உங்கள் சிந்தனைக்கு

## முறுக்கும் லட்டும்

திருவாளர் கணக்கருக்கு அன்று 60 ஆவது பிறந்தநாள். அவரது பேரன்மார் ஜோஸ், விக்டர், ஜெயசுரன் மூவரும் காலையிலே வந்து பிறந்தநாள் வாழ்த்துக்கூறினார்கள். தாத்தா மூன்று பேரன்களுக்கும் ஆளுக்கு ரூபா 10 பரிசாகக் கொடுத்து, தின்பண்டங்கள் வாங்கிக்கொள்ளச் சொன்னார். மூன்று பேரும் கடைக்குச்சென்று தின்பண்டங்கள் வங்கி வந்தார்கள்.

"எந்தக் கடையில் வாங்கினீர்கள்?" தாத்தா வினவினார்.

"நம் வீட்டுக்கு எதிரில் இருக்கும் கடையில்தான்" மூவரும் ஒரே குரலில் பதில் சொன்னார்கள்?"

"தாத்தா, லட்டும் முறுக்கும்" மூவரும் பதில் சொன்னார்கள்.

"நீங்கள் கொடுத்த 10 ரூபாய்க்கும் முறுக்கும், லட்டும் 20 வாங்கி இருக்கிறேன்" ஜோஸ் சொன்னான்.

"நீங்கள் கொடுத்த 10 ரூபாய்க்கும் முறுக்கும், லட்டும் 30 வாங்கியிருக்கிறேன்" விக்டர் முழங்கினார்.

"நீங்கள் கொடுத்த 10 ரூபாய்க்கும் முறுக்கும், லட்டும் 40 வாங்கியிருக்கிறேன்" இரைந்தான் ஜெயசுரன்.

"கணக்குப் போடுகிற தாத்தா, நீங்கள் சொல்லுங்கள். நாங்கள் மூவரும் தனித்தனியாக எத்தனை முறுக்கு வாங்கினோம்? எத்தனை லட்டு வாங்கினோம்? மூவரும் புதிர் போட்டனர். திரு. கணக்கர் சில நொடியில் கூறிவிட்டார். பேரன்மார் ஆச்சரியப்பட்டார்கள். நீங்கள் கண்டுபிடியுங்கள்.

## கணக்கரும் தம்பியும்

திருவாளர் கணக்கரின் தம்பிக்கு திருமணம் நடைபெற்றது. திருமணத்துக்கு வந்திருந்த நண்பர் ஒருவர் கணக்கரிடம், "தம்பிக்கு வயது என்ன?" என்று கேட்டார். திரு. கணக்கர் கூறினார்: '10 ஆண்டுகளுக்கு முன் எனது திருமணம் நடைபெற்றபொழுது என் தம்பியின் வயது என் வயதில் 1/4 பங்கு குறைவாக இருந்தது. இப்பொழுது என் வயதில் 1/6 பங்கு குறைவாக உள்ளது. நீங்களே என் தம்பியின் வயதைக் கணக்குப் போட்டுக் கொள்ளுங்களேன்"

கணக்கரிடம் தம்பியின் வயதைக் கேட்டவருக்கு, வயிற்றைக் கலக்கியது. "நான் வீட்டுக்குப் போய் பென்சிலும், தாளும் எடுத்துக் கணக்குப் போட்டுக் கொள்கிறேன். ஆளைவிடும்" என்று அலுத்துக் கொண்டார். 'நமது ஈழநாடு' வாசகர்கள் புத்திசாலிகள். எளிதில் கணக்கரின் இப்பொழுதுள்ள வயதையும், தம்பியின் வயதையும் கண்டுபிடித்துவிடுவார்கள்.

## விஞ்ஞானி நண்பர்

திருவாளர் கணக்கர் ஒருநாள் அவருடைய விஞ்ஞானி நண்பர் ஒருவரின் ஆய்வுகூடத்துக்குச் சென்றிருந்தார். விஞ்ஞானி ஒரு சோதனைக்குழாயைக் காட்டி, "இதில் ஒரு உயிரணுவை விடுகிறேன். அந்த உயிரணு நொடிக்கு இரண்டாகப் பெருகும் தன்மை வாய்ந்தது. உயிரணுக்கள் இந்த 4 அவுன்ஸ் சோதனைக்குழாயின் 1/4 பாகம் நிரம்ப 10 நிமிடங்கள் எடுத்துக்கொள்கின்றன. சோதனைக் குழாய் முழுவதும நிரம்ப எடுத்துக்கொள்ளும் நேரம் எவ்வளவாகும்" என்று கேட்டார்.

"கணக்கில்லாமல் விஞ்ஞானம் கிடையாது. எனக்கே கணக்குப் போடுகிறீரா?" என்று சீறிக்கொண்டே நொடிப்பொழுதில் விடையைக் கூறிவிட்டார். நீங்கள் விடையைக்கண்டுபிடிக்க எவ்வளவு நேரம் எடுக்கிறீர்கள் பார்ப்போம்...

## இரு வினாக்களுக்கு விடை தருக?

1. குவளையில் நீர் குறைவதேன்?
   குப்புசாமி உளறுவது ஏன்?
2. அண்ணன் கல்வியில் வாங்காதது?
   தம்பி கடையில் வாங்கியது?
3. நாக்கு இனிப்பதேன்?
   நாய் ஓடுவதேன்?
4. ரசம் மணப்பதேன்?
   படைவீரர் சாவதேன்?
5. பார்ப்பது எதனால்?
   கண்ணீர் வருவது எதனால்?

சிறீஸ்கந்தராஜா–அசோக்கமாலா
தரம் 11
யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.





## யாருடைய கண்ணாடி தொலைந்துவிட்டது?



## பழமொழிகள்

1. All the Glitters is not gold.
மின்னுவதெல்லாம் பொன்னல்ல.

2. Practice makes Perfect.
அனுபவம் மனிதனை முழுமையாக்கும்.

3. Make hay while the sun shines.
காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.

4. Look before you leap.
பாய்வதற்கு முன் சிந்தித்துப் பார்க்கவும்.

5. Union is strength.
ஒற்றுமையே பலம்.

சிறிஸ்கந்தராஜா அசோக்கமாலா,
தரம் - 11,
யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

## வேறுபாடு




வேட்டைக்காரனொருவன் வேட்டை நாயொன்றை வளர்த்து வந்தான். அவன் அதன்மீது இரக்கமாகவும், அன்பாகவும் இருந்தான். அது வேட்டையாடி மிருகங்களைப் பிடித்துவருவதால், வேட்டைக்காரனுக்கு உணவுக்குப் பஞ்சம் இல்லாமல் இருந்தது. நாய்க்கும் நன்கு உணவு கிடைத்து வந்தது.

ஒருநாள் நாயையும் அழைத்துக்கொண்டு வேட்டைக்காரன் காட்டுக்குள் சென்றான். அவர்களின் அரவம் கேட்டதும் பற்றையினுள் இருந்த முயலொன்று விரைந்தோடியது.

வேட்டைக்காரன் நாயை ஏவினான். நாய் முயலைத் துரத்திக்கொண்டு வெகு தொலைவுக்குச் சென்றது. முயல் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் வேட்டைக்காரன் நாயின் வரவை எதிர்பார்த்திருந்தான் வேட்டைக்காரன். ஆனால், அது வெறுங்கையோடு களைத்தபடி வந்தது. அவனுக்கோ ஏமாற்றமாகிப் போய்விட்டது.

காலைச் சுற்றிச் சுற்றிவந்த நாயைப் பார்த்து "உன்னால் ஏன் அந்த முயலைப் பிடிக்கமுடியவில்லை" என்று வினவினான். தனது எசமானனைப் பார்த்து நான் உணவுக்காக ஓடினேன்; ஆனால் முயலோ தனது உயிருக்காக அல்லவா ஓடிக்கொண்டிருந்தது" என்ற மெதுவாகக் கூறியபடி அவனருகில் படுத்துக்கொண்டது வேட்டைநாய்.

## வாசிகசாலை



வண்ண வண்ணப் பத்திரிகை
வந்திருக்குப் பாருங்கள்
வாசித்து மகிழ்ந்திடலாம்
வாருங்கள் தோழர்களே!

சிறுகதைகள் கட்டுரைகள்
சின்னஞ்சிறு கவிதைகளாம்
நாட்டிலுள்ள செய்திகளும்
பார்த்திடலாம் தோழர்களே!

மாணவரின் ஓவியங்கள்
மனங்கவரும் தொடர்கதைகள்
மனம் வைத்துப் படித்திடுவோம்
வாருங்கள் தோழர்களே!

கண்டதெல்லாம் கற்றவர்கள்
பண்டிதர்கள் என்பார்கள்.
கண்ணியமாய்க் கற்றிடுவோம்
வாருங்கள் தோழர்களே!

## உங்களுக்குத் தெரியுமா?

1. முதலாவது "சேர்" பட்டம் பெற்ற இலங்கையர் யார்?
கலாநிதி ஆனந்த குமாரசுவாமி

2. உலகின் முதலாவது புகைப்படத்தை எடுக்கச் செலவாகிய நேரம் எவ்வளவு?
8 மணித்தியாலம்


3. ஒரு சிலந்தி தனது வலையைப் பின்ன எவ்வளவு நேரம் எடுக்கிறது?
3 மணித்தியாலம்

4. ஈராக்கின் தேசியச் சின்னம் எது?
சிவப்பு ரோஜா

5. "வைரஸ்" என்ற சொல் எந்த மொழியில் இருந்து வந்தது?
லத்தீன்

நே.தனுசியா,
தரம் - 07,
யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை

**இரு படங்களுக்குள்ளும் ஐந்து வித்தியாசங்கள் உள்ளன. கண்டுபிடியுங்களேன்.**





## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா? அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந்தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது. நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந்தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்
### விண்ணப்பம்

முழுப் பெயர் : ......................
கற்கும் பாடசாலை : ......................
கற்கும் தரம் : ......................
வீட்டு முகவரி : ......................
பிறந்த திகதி : ......................
ஆர்வமுள்ள துறைகள் : ......................

...................... ......................
திகதி ஒப்பம்

...................... ......................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

## அரிய நான்கு செய்திகள்



### நெப்ரியூன்

சூரிய குடும்பத்தில், நெப்ரியூன் எட்டாவது கிரகமாகும். ரோமானியரின் கடற்தெய்வத்தின் பெயரால் இது அழைக்கப்படுகிறது. இது சூரியனைச் சுற்றிவர 165 வருடங்கள் எடுக்கும். சூரிய குடும்பத்தி லுள்ள (குளிர்) உறைநிலையிலுள்ள கிரகங்களுள் இதுவும் ஒன்றாகும்.

மூன்றாவது கிரகமான பூமியும், நான்காவது கிரகமான செவ்வாயும் நெருங்கிவரும்பொழுதுள்ள தூரம் 5,45,00,000 கிலோ மீற்றர். தூரவிலகும் போதுள்ள தூரம் 40,13,00,000 கிலோ மீற்றர் ஆகும்.

### காண்டாமிருகம்

காண்டாமிருகம் பார்க்கப் பயங்கரமாக இருந்தாலும் சாதுவானவை. இதில் பல வகைகள் உண்டு. உருவத்தில் பெரியன, சிறியன,வெள்ளை, கறுப்பு, ஒரு கொம்பு உள்ளவை, இரண்டு கொம்புகள் உள்ளவை எனப்பல வகைகள் உண்டு.

இவை தாவர உணவை உண்ணும். இரவில் மட்டும் இரை தேடும்.

ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தான் குட்டி போடும். இதன் கருக் காலம் 18 மாதங்கள் ஆகும்.

### வரிக்குதிரை

ஆபிரிக்காவில் தான் வரிக்குதிரைகள் அதிகம். இதில் மெல்லிய வரிகள், தடித்த வரிகளென இரண்டு வகை உண்டு. இவை ஒருமித்து மேயும் போது, ஒரு குதிரை மட்டும் எதிர்த்திசையில் நின்று காவல் புரியும். இந்தியாவில் இவற்றை வண்டி இழுப்பதற்குப் பாவிக்கிறார்கள்.

சர்க்கஸ் காட்சிகளிலும் வரிக்குதிரைகள் பயன்படுத்தப்படுகின்றன.

இந்தக் குதிரைகளில் காணப்படும் வரிகள் எல்லாக் குதிரைகளிலும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை.

# எலி வேட்டை









# குஞ்சுக் கோழி

குப்பை மேட்டில் நிற்கிறது
பெரிய கோழி
குஞ்சைக் கூட்டிச்செல்கிறது
பெரிய கோழி

குஞ்சுக்கான உணவு காட்டும்
கறுப்புக் கோழி
குப்பைகளைக் கிளறிக் காட்டும்
கறுப்புக் கோழி

பருந்துவரப் பார்க்கிறதே
பெரிய கோழி
பதுங்கிக் கொள்ளச் சொல்கிறது
பெரிய கோழி

பட்டெனவே பாய்ந்தோடிக்
குஞ்சுக் கோழி
பக்குவமாய் மறைந்ததுவே
குஞ்சுக் கோழி



நமது ஈழநாடு

வைர வரிகள்

நரிக்கு நாட்டாமை கொடுத்தால்
கிடைக்கு இரண்டு ஆடு கேட்குமாம்.
- பழமொழி -

## நமது நோக்கு

# சர்வதேச சமூகத்தின் சிந்தனைக்கு...!

சொல்லவேண்டிய விடயங்களை சொல்லவேண்டியவர்களுக்கு இறுதியும், உறுதியுமாகச் சொல்லவேண்டிய காலம் வந்துவிட்டது.

அதாவது, கடந்த அரைநூற்றாண்டுகால பௌத்த - சிங்களப் பேரினவாதிகளின் தமிழ்பேசும் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளுக்கும், ஒடுக்குமுறைகளுக்கும் தீர்க்கமானதொரு முடிவை எடுக்கவேண்டிய வரலாற்றுக் கட்டாயம் உருவாகியுள்ள நிலையில், அந்த முடிவு எப்படியானதாக இருக்கும் அல்லது எப்படியானதாக இருக்கவேண்டும் எனபது குறிதது சமாதானத்தையும், அமைதியையும், ஜனநாயகததையும் தொடர்ந்து வலியுறுத்திவருகின்ற சர்வதேச சமூகத்துக்குத் தெளிவான சிந்தனையை ஏற்படுத்தும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 22 உறுப்பினர்களும் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் தமது நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளார்கள் என்றே கூறவேண்டும்.

இலங்கையின் இனமுரண்பாடு குறித்தும், அதன் ஆழ மூலஙகள் குறித்தும் சர்வதேச சமூகத்துக்கு விலாவாரியாக விபரிக்கவேண்டிய அவசியமேயில்லை.

இலங்கையில் இனபேதங்களுடனான சர்வதேசத்தின் பன்முகப்படுத்தப்பட்ட உறவுகளையும், அதனால் ஏற்பட்ட தாக்கங்களையும், அதற்கான எதிர்விளைவுகளையும் வரலாறு பதிவு செய்துகொண்டேயுள்ளது.

கடந்த இரு தசாப்தகால போரும், அதனைத் தமிழ் மக்களுக்கு எதிராக முன்னெடுத்த பௌத்த - சிங்கள மேலாதிக்க சக்திகளின் இனவெறிச் செயற்பாடுகளும், எத்தகைய கொடூரமான சர்வாதிகாரத்தன்மை கொண்டவை என்பதற்கு, இரத்த வெடில் மணக்கும் மகாவம்சத்தின் நவீன அத்தியாயங்களின் உள்ளடக்கமே சிறந்த சான்றாகும்.

தமது அடிப்படை உரிமைகளை - வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகளை வென்றெடுக்கவும், தம்மீது ஜனநாயக விரோத முறையில் திணிக்கப்பட்ட சகலவிதமான அரசியல்-இராணுவ - பொருளாதார அடக்குமுறை அழுத்தங்களையும தகர்த்தெறியும் வெஞ்சினத்துடன் அமைதி வழியில் போராடி, நியாயம்கோரிய தமிழ்மக்கள் ஆயுத முனையில் அடக்கி அழிக்கப்பட்ட வரலாறு உலகறியா ஒன்றல்ல.

அந்த ஆயுதரீதியிலான அடக்குமுறை இராணுவ நடவடிக்கைகளுக்கு அதன் அநியாயத் தன்மையை அறிந்தோ அறியாமலோ, இராணுவ உபகரணங்களை பேரினவாத ஆட்சயாளருக்கு வழங்கியும், விற்றும் பேருதவிசெய்து ஒடுக்கப்பட்டு நியாயம்கோரிப் போராடிய தமிழ் மக்களைப் பயங்கரவாதிகள் என்ற பட்டியலில் சேர்த்து வரலாற்றுத் தவறைச் செய்த சர்வதேச நாடுகளும் உண்டு.

அந்த நாடுகள் இன்று சமாதானத்தையும், சமஷ்டித் தீர்வையும் வலியுறுத்துகின்றன என்றால் அது சொல்லும் செய்த மிகவும் முக்கியமானது.

அதாவது, தமிழ் மக்கள் பயங்கரவாதிகளுமல்ல, அவர்களின் போராட்டம் பயங்கரவாத நடவடிக்கையுமல்ல என்பதே அந்தச் செய்தியாகும்.

அது நியாயமாக, அரசியல் ரீதியில் பேசித்தீர்க்க வேண்டிய, அதாவது சமஷ்டி ரீதியில் தீர்வுகாணவேண்டிய பிரச்சினை என்பதை சர்வதேச சமூகம் இன்று உணரத் தலைப்பட்டுள்ளதையே அதன் இன்றைய நிலைப்பாடு உணர்த்தி நிற்கிறது எனலாம்.

இதற்காக மூன்று தசாப்தகாலம் பல்லாயிரம் மக்களை, போராளிகளை - தமிழ் மக்கள் இழக்கும் வரலாற்றுத் துயரத்தைச் சுமப்பவர்களாகியுள்ளனர்.

-எனினும் என்ன?

சர்வதேச சமூகம் புரிந்துகொண்டுள்ளதை சிங்கள சமூகமும், அவர்களின் மேலாதிக்க அரசியல் தலைமைகளும் இன்னமும் புரிந்துகொள்ள மறுப்பவர்களாகவே உள்ளனர்.

-அவர்களின் மேலாதிக்க வெறி தணியவில்லை. இன்னமும சமாதானப் பாடலைப் பாடியபடி யுத்த சன்னதம் கொண்டலைவோராகவே அவர்கள் காணப்படுகின்றனர்.

-தம்மோபதேசம் செய்துகொண்டு, மஞ்சள் அங்கிக்குள் தம்மை உருமறைப்புச்செய்தபடி பேரினவாத சிந்தனையுடன் அரசியல்பேசும் பிக்குகளும் இதற்கு விதிவிலக்கல்ல...

-சமாதானத்தையும், அமைதி முயற்சியையும், மனிதாபிமானச் செயற்பாடுகளையும் முற்றாக நிராகரிக்கும் ஒருவரையே ஜனாதிபதியாக வர ஆதரவளிப்போம் என்றுகூறும் அரசியல் தலைமைகள் - ஆட்சி அதிகாரக் கதிரைகளுக்கு குறிவைத்து நிற்கும் சிங்களதேசம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நீதியான, நிலையான தீர்வொன்றைத் தரப்போவதில்லை என்ற அரசியல் யதார்த்தத்தை உலகம் புரிந்துகொள்ளவேண்டிய இறுதிக்கட்டம் நெருங்கிவந்து கொண்டிருக்கிறது.

இந்த நிலையில், சர்வதேச சமூகம் கூறும் நியாயபூர்வமானதும், தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை உள்ளடக்கியதும், சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதுமான சமாதான ரீதியிலான தீர்வொன்றுக்கு இசைந்துவர அரசாங்கம் மறுக்குமேயானால், தமிழரின் போராட்டத்தை அங்கீகரித்து, தமிழர் தாயகம் விடுதலைபெற ஆதரவளிக்கவேண்டிய தார்மீகப் பொறுப்பை அதே சர்வதேச சமூகம் ஏற்கவேண்டும் என்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரின் அறிக்கையில் உள்ள கோரிக்கை நியாயமானதே.

இந்தக் கோரிக்கையிலுள்ள நியாயத் தன்மையை சர்வதேச சமூகம் ஆழமாகச் சிந்திக்கவேண்டும் என்பதே சமாதானத்தை நேசிக்கும் மானுட சமூகத்தின் பெருவிருப்புமாகும்.


267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com



நான் என் மனதிற்கு நேர்மையாகவும், தூய்மையாகவும்தான் எனது பொறுப்பைச் செய்தேன். ஆனால், நான் எனது மக்களுக்குப் பணியை முழுமையாக்கவில்லை என்பதையிட்டுப் பெரும் கவலையடைகின்றேன்.
*- தியாக தீபம் லெப்.கேணல் திலீபன்-*

## நாடும் நடப்பும்

செய்தி:-
இ.தொ.காவின் 19 நிபந்தனைகளை ரணில் விக்கிரமசிங்க ஏற்றார்.




'ஊர்சுற்றி' பார் பார்வையில்...

# 'அடி உதவுகிற மாதிரி' என்ற பழமொழி நமது நாட்டுக்குத்தான் வெகு பொருத்தம்!

முன்பெல்லாம் சமஷ்டி ஆட்சி அமைப்புத்தான் நமது நாட்டுக்கு ஏற்றது என்று யாராவது நாடாளுமன்றத்தினுள்ளேகூடக் குரல்கொடுத்துவிட்டால் போதும், நாடு துண்டாடப்பட்டுவிடும், பிளவுபட்டுப் போகும் என்று தென்னிலங்கையில் கூச்சல் பெரிதாகக் கிளம்பிவிடும். இப்பொழுது காலம் தலைகீழாக மாறியிருக்கிறது கவனித்தீரா, என்று கேட்டபடி வந்தார் நண்பர் பரமசிவம்.

அப்படி என்ன பெரிதாக மாறியிருக்கிறது. அதே பிரிவினை, பிளவுபட்டுவிடும், துண்டாடப்பட்டுவிடும் என்ற வார்த்தைகள்தான் இன்னமும் ஒலித்துக் கொண்டிருக்கிறது என்றேன்.

ஒற்றையாட்சியை வலியுறுத்தி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுபவர்கள் வெற்றிபெற்றால், இந்த நாடு புதைகுழியாக மாறுவது உறுதி.

நாடு இரண்டாகப் பிளவுபடுவதற்கான வழியே ஒற்றையாட்சி மூலமான தீர்வு என்று புதிய இடதுசாரி முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சமின் ஜயநெத்தி தெரிவித்திருக்கிறார் என்று பரமசிவம் சொன்னார்.

சமஷ்டி என்று சொன்னாலே நாட்டைப் பிரித்துவிடுவார்கள் என்று ஏதோ தீயில் மிதித்தவர்கள் மாதிரித் துள்ளிக் குதித்தவர்கள் இன்று ஒற்றையாட்சி என்று சொல்லுபவர்கள், நாட்டைப் பிளவுபடுத்திப் புதை குழிக்குள் தள்ளப்பார்க்கிறார்கள் என்று சொல்லத் துணிந்துவிட்டார்கள் என்று சொன்னேன்.

நாங்கள் இன்னமும் காந்தீய வழியில் சாத்வீகப் போராட்டங்கள் நடத்தி சமஷ்டி ஆட்சி அமைப்பை ஏற்படுத்தி 'நீங்களும் வாழுங்கள், எங்களையும் வாழவிடுங்கள்' என்று கோரிக்கை விடுத்துக் கொண்டிருந்தோமென்றால் எங்கள் மீது தாக்குதல் நடத்தி விரட்டி அடித்து நாட்டைப் பிரிக்கப்பார்க்கிறார்கள் என்று தேசத்துரோகக் குற்றமும் சாட்டியிருப்பார்கள்.

எங்கள் இளைஞர்கள் கையில் ஆயுதம் ஏந்தி எங்கள் மண்ணில், எங்கள் ஆட்சியை நாங்கள் ஏற்படுத்துவோம் என்று குரல் எழுப்பிய பின்னர்தான் அவர்களுக்கு இது புரியவருகிறது என்று பரமசிவம் சொன்னார்.

அடி உதவுமாப்போல் அண்ணன்தம்பி உதவான் என்று எங்கடை வீடுகளில் சொல்லுகிற பழமொழி நினைவிருக்குதோ என்றேன்.

அது உண்மைதான். இந்தப் பழமொழிக்கு சிறிலங்காவும் சிங்களத் தலைவர்களும் நாங்கள் நடத்திய போராட்டங்களும் தான் சரியான உதாரணம் என்றார் பரமசிவம்.

இன்னொரு வேடிக்கை பார்த்தீரா. அயலிலுள்ள கோமாளி சுப்பிரமணியம் சுவாமி சும்மா இருக்க முடியாமல் விடுதலைப் புலிகள்மீது சொறிவதாக நினைத்துக் கொண்டு சில தினங்களுக்கு முன்னர் கொழும்பு ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு ஒரு கட்டுரை அனுப்பியிருந்தாரல்லவா? அந்தக் கட்டுரையில் பாகிஸ்தான் உளவுப் படைகளுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பிருப்பதாக எழுதியிருந்தார். சுப்பிரமணியம் சுவாமியின் கற்பனை என்று அந்தத் தொடர்பை மறுத்திருக்கும் கொழும்பிலுள்ள பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயம் விடுதலைப் புலிகளை உருவாக்கியவர்களும், ஆதரித்தவர்களும் யார் என்பது எல்லோருக்கும் தெரியும் என்று எழுதி சுப்பிரமணியம் சுவாமியின் மூஞ்சியில் கரிபூசியிருக்கிறது. இனியாவது சுவாமி அடக்கி வாசிக்கட்டும் என்று சொன்னேன்.

அது சரி சந்திரிகா அம்மையார் அமெரிக்காவிலிருந்து தம்பியுடன் இன்று நாடு திரும்புவார் என்று ஒரு பத்திரிகைச் செய்தி கூறுகிறது. மற்றொரு பத்திரிகைச் செய்தி அவர்கள் நாடு திரும்புவதற்குப் பத்துத் தினங்கள் செல்லுமென்று கூறுகிறது. இதில் எது சரியாயிருக்குமென்று கேட்டார் பரமசிவம்.

எது சரியாக இருக்கும் எப்பொழுது வருவார்களென்பது அக்காவுக்கும் தம்பிக்கும் தான் தெரியும் என்றாலும், அவர்கள் நாடு திரும்பியதுமே நாட்டின் அரசியலே பெரிதாக மாறிவிடப் போகிறதா? என்றேன்.

ஜனாதிபதி தேர்தலுடன் சேர்த்து நாடாளுமன்றத்தையும் கலைத்துப் புதிய பொதுத் தேர்தல் நடத்துவாரா? என்று கேட்ட பரமசிவம், ஜனாதிபதித் தேர்தலே அவர்களுக்குக் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இத்துடன், நாடாளுமன்றத் தேர்தலையும் வைத்து மேலும் குழப்புவதற்கா விரும்புவார் என்று சொல்லிக் கொண்டே பரமசிவம் நடந்தார்.

# இப்பகுதி மக்களின் சிரமங்கள் நீங்க!

## வாசகர் நோக்கு

கோப்பாய் தெற்கு, மாதா கோவில் வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாமையால், போக்குவரத்துக்கு உதவாத நிலையில் காணப்படுகிறது.

குறிப்பாக இரவு வேளையில், இவ்வீதியால் பயணம் செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

அத்துடன், இவ்வீதியில் உள்ள வீடுகளுக்கு மின்சாரம் முழுமையாக வழங்கப்படவில்லை. வீதியின் குறிப்பிட்ட சில பகுதிகளுக்கே மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. ஏனைய பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை. இதனாலும், இந்தப் பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது.

இந்த வீதியையும் சீரமைத்து மின்சார விநியோகமும் வழங்கி, இந்தப் பகுதி மக்களின் கஷ்டங்களை சம்பந்தப்பட்டவர்கள் நீக்குவார்களா?

...பில் — கோப்பாய்.

## திலீபநின் தாள் பணிந்து வணங்குகின்றோம்



எங்களுக்கோர் தமிழீழம் படைக்க வேண்டும்
எம்மண்ணை மீட்டரசு அமைக்கவேண்டும்
சிங்களத்து இராணுவத்தின் பலமுடைத்து
செந்தமிழை அரியணையில் அமர்த்தவேண்டும்
வெங்களத்து எதிரிகளை வீழ்த்தியவர்
உடல்மிதித்து எரீதணலில் பொசுக்க வேண்டும்
என்றெழுந்த கரிகாலன் சிந்தனைக்காய்
உயிர்நீத்த திலீபாவுன் பதம் பணிந்தோம்

மானமுடன் வாழ்ந்தவரெம் மரபுகாக்க
மரபுவழி நாம் வாழ்ந்த மண்ணைக்காக்க
தேனமுதத் தமிழணங்கி னுரிமைகாக்க
தித்திக்கு மிளமையினைத் தியாகம் செய்து
சேனையுடனடிபதித்த பாரதத்தின்
செருக்கடக்க நிபந்தனைகள் விதித்துவிட்டு
கானமழை பொழியுமந்த வேலவனின்
காலடியில் தவமிருந்த திலீபா வாழீ

உலகமெலாம் ஓடியோடிப் படைக்கலங்கள்
திரட்டுகின்ற சிங்களத்துப் படையழிக்க
பலமுடைய மதியினுயர் நம்தலைவன்
பலகோடி நிதிதிரட்டிப் படையெடுக்க
தலைசிறந்த வேங்கைகளைப் பெருக்குகின்றான்
நிலைகுலைந்து சிங்கங்கள் வீழ்ந்தழிய
தலைமுறையி னாட்சியிங்கு நடத்துகின்றான்
திலீபநின் தாள்பணிந்து வணங்குகின்றோம்.

- மாரீசன் -

## பொங்கு தமிழா! பொங்கி எழு!



அலையலையா மக்கள் வெள்ளம் திரளுது...
அணையறியா விடுதலையின் வேகம் தெரியுது...

பொங்கு தமிழ் ! பொங்கு தமிழ் !! பொங்கு தமிழ் !!!
ஊருக்கு உலகிற்கு
பொங்கு தமிழ் பேரெழுச்சி அழைப்பு - இது
எங்கள் ஆத்ம வல்லமையின் துடிப்பு...


வீரம் விளைத்து உயிர் தியாகம் நிறைந்த - எங்கள்
விடுதலை தெய்வங்களே...
தாயக விடியலின் தேதி குறித்திட
திரண்டெழுந்தோம் ஆசி தாருங்களே !

சண்முக பாரதி

## ஆற்றல் பெருக்கல் வாய்ப்பாடு - ஒலிநாடா ஓர் பார்வை

கற்றல் இலகுபடுத்தும் நடவடிக்கைகளில் பற்பல ஆய்வு களும், ஆய்வுகளின் வெளிப்பாடாகும். அவற்றை நடைமுறைப் படுத்தும் செயற்பாடுகளும் பெருகிவரும் இக்கால கட்டத்தில்- ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி கற்கும் மாணவர்களின் கணித வாய்ப்பாட்டினை மனனம் செய்யும் இலகு இசைவ்டிவத் திலான ஒலிநாடா வெளி வந்திருப்பது ஓர் வரப்பிரசாதமாகும்.

இசை ஒருவர் மனதைக் குறிப்பாக - குழந்தைப் பருவத்தின ரையும், பிள்ளைப் பருவத் தினரையும் வலுவாகக் கவரும். கணிதம்




என்பதும், அதில் வாய்ப்பாடு பாடமாக்குவதும் மாணவர்களுக்குச் சிரமத்தின் மேல் சிரமம் என்பது மட்டுமன்றி, திண்டாட்டமான கற்றல் செயல் என எண்ணிக் கணிதத்தையே வெறுக்கும் பிள்ளைகளை எம் மத்தியில் காணலாம். எமது குழந்தைப் பருவத்தில் எம் மனநிலையை நாம் திரும்பிப் பார்ப்பினும் அந்தநிலை புரியும்.

கற்றல் என்பது- இனிமையானது என்பதை ஒவ்வொரு அலகையும் நன்கு விளங்கி, ரசித்துக் கற்கும் போதே நாம் உணர்வோம். அந்த வகையில் வாய்ப்பாட்டைப் பாடமாக்குதல், மனதில் பதித்தல் தேவைக்கேற்ப வாய்ப்பாட்டைப் பாட மாக்குதல் என்பதற்கான உத்தி அவ்வாய்ப்பாட்டினை இசையில் கொடுப்பதே என்ற கல்வியியல் சிந்தனையுடன் ஆற்றல் ஒலி நாடா வெளிவந்திருப்பது இக்காலக் கல்வி கற்கும் மாணவர்களின் உளத்தேவையை இவ் ஒலிநாடா நிறைவு செய்யும் எனலாம்.

மாணவன் விளையாடும் போதும், உணவை உண்ணும்போதும், கைவேலை செய்யும் போதும், பொழுது போக்காக வேறு முயற்சிகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போதும் ஒலி நாடாவை போட்டுக் கேட்பதன் மூலம் தன்னையறியாமலே வாய்ப்பாடு மனதில் பதியவைக்கும்.

வாய்பாட்டைப் பாடமாக்கவென்று நேரத்தை ஒதுக்காமலே, வாய்பாட்டை கையில் வைத்துப் பார்த்த வண்ணம் பாடமாக்கும் சுமையே இல்லாமல், இசையோடு இணைந்து, வாய்ப்பாட்டை மனிதில் பதிக்கும் ஓர் இலகு கற்றல் முயற்சியே இவ் ஆற்றல் ஒலிநாடாவின் வெளிப்பாடு எனலாம்.

யாழ்/நுண்கலைப்பீட மாணவி செல்வி கிரிஜா இராஜ கோபாலனின் குரல் வளம் வாய்ப்பாட்டுக்கு இனிமையையும், தெளிவையும், எழுச்சியையும் கொடுக்க - யாழ்/இந்துக்கல்லூரி மாணவன் செல்வன் விஸ்வநாதன் சாருஜனின் இசையமைப்பும் "ஆற்றல் ஒலி நாடாவிற்கு" உயர் உந்துசக்தியைக் கொடுக்கிறது.

இவ்வொலிநாடா மாணவர்களின் கணித மனக்கற்றல் மட்டுமன்றி, கற்பிக்கும் ஆசிரியர்கள், பெற்றோர்கள் போன்றோருக்கும் நன்மை பயப்பதாக அமையும். கணித எண்ணக்கருவும், கற்றல் கற்பித்தல் நுட்பமும் ஞாபகத்தை ஏற்படுத்தும் உளவியல் உத்தி யும் கொண்டு, ஒலி நாடாவைத் தன் விடாமுயற்சியாலும், கற்றல் எண்ணக்கரு முனைப்பினாலும் உந்தப்பட்டு இவ்ஆற்றல் ஒலி நாடாவை இசை வடிவில் வெளியிட்ட ஆக்கப்படைப்பாளியும் யாழ்/இந்துக் கல்லூரியில் கடமை புரியும் பரம் குகராஜாவை கல் வியியல் சமூகமும், மாணவ சமூகமும், பெற்றோரும் போற்றவும், பாராட்டவும் வேண்டியவர்கள்.

- மலர். சின்னையா விரிவுரையாளர்
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.

## நீர் விரயமாவதை இன்றுடன் நிறுத்துவோம்

இயற்கை வளங்களிலே நீர்வளம் என்பது உலகிலே இன்றியமையாத ஒன்றாக இருக்கிறது. தாவரங்கள் விலங்குகள் என்பவற்றில் 90 சதவீதத் துக்கு மேல் நீர் ஆகும். அத்தோடு போக்குவரத்து, மின்சாரம், தீயணைப்பு, மருத்துவம், கட்டடங்கள் கட்டுதல், இரசாயனப்



பொருட்கள் தயாரித்தல் போன்றவற்றுக்கும் நீர் பிரதான பங்கை வகிக்கின்றது. இதனால் மிக வேகமாக அதிகரித்து வரும் சனத்தொலைக்கு ஏற்ப நீரின் தேவைகளும் அதன் பாவனைகளும் அதிகரிக்கிறது என்பது உண்மை.

உலகில் மூன்றில் இரண்டு பகுதிக்கு மேல் நீர் வளமாகும். மிகுதி 3/1 பகுதிக்கு உட்பட்ட அளவே நிலப்பரப்பு. நீர் என்பது - கடல், குளம், ஆறு, குட்டை கிணறு போன்றவற்றில் உள்ளடங்குகிறது. இந்த நீரில் மிக மிகக் குறைவான அளவே நாம் பருகக் கூடிய குடி நீர் ஆக உள்ளது. எமது தேசத்தைப் பொறுத்தவரையில், கிணறுகளில் ஏறத்தாள 40 சதவீதத் துக்கு உட்பட்ட கிணறுகளே குடி நீரைப் பெறக்கூடியதாகவுள்ளது. மிகுதி பருக முடியாத உப்பு நீராகவும், உவர் நீராகவும் இருக்கின்றன. இதன் காரணத்தால் நீருக்காகப் பல இடங்கள், வெகுதூரம் தாண்டிச் சென்று, குடி நீரைப் பெறுகின்ற அவல நிலையை மக்கள் எதிர் நோக்குவதை நாம் கண்கூடு கண்டு கொண்டே இருக்கிறோம்.

நீர் என்பது - ஒரு வரையறுக்கப்பட்ட வளம். அதாவது - பயன்படுத்தப் பயன்படுத்த அதனளவு குறைந்துகொண்டே போகும். இதன் காரணமாக எதிர்காலத்தில் நீருக்குப் பஞ்சம் ஏற்பட்டு - மனிதகுலம் வறட்சியின் பிடியால் அழிந்து போகக் கூடிய அபாயத்தை எதிர் நோக்கி நிற்கிறது என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

யாழ்ப்பாணத்தில் கூட இந்த நிலைமைகளின் ஆரம்ப அறிகுறிகளை நாம் காண்கின்றோம். மித மிக ஆழம் கூடிய கிணறுகள் குறிப்பிட்ட அளவு நீரைப் பயன்படுத்திய பின்னர், விரை வில் வற்றிப் போகும் கிணறுகள் உவர் நீராகப் பயன்படுத்த முடியாத நிலைக்கு மாறும் கிணறுகள் என்பவற்றை நாங்கள் கண்டு கொண்டே இருக்கிறோம்.

இவையெல்லாம் எதிர்கால சக்திகள் எதிர்நோக்கவிருக்கும் பிரச்சினைகளின் சிறு அளவே. இந்த நிலையில் இன்னும் நூறு, நூற்றைம்பது வருடங்களில் பிற்பாடு எமது சந்ததிகள் அவுலப்படுவதற்கு நாம் காரணமாக இருக்காமல், நாம் இப்பொழுதே விழிப்பாக இருந்து செயற்படுவது எமது தார்மீகக் கடமை அல்லவா...?

மனித சனத்தொகை அதிகரிப்பு, நீரின் பயன் பயன்பாடு அதிகப்பதற்கு முக்கிய காரணமாக இருக்கிறது. அடுத்ததாக வெகுவாக மேற்கொண்டு வரும் காடழிப்பு நடவடிக்கைகளும் நீரின் அளவைக் கட்டுப்படுத்திக் குறைக்கிறது என்கிறது விஞ்ஞானம். நமது தேசத்தில் கூட மிக மோசமாகக் காடுகள் அழிக்கப்பட்டு வருவது வேதனை தரக்கூடிய விடயமாகும். போரின் போது இலங்கை இராணுவத்தினரின் குண்டுகளால் காடுகள் எரிக்கப்பட்டு, அழிக்கப்பட்டு வருவதும், இராணுவ தேவைகளுக்காக காடுகள் அழிக்கப்படுவதும், விறகு, பலகை என்பவற்றுக்காக கண்மூடித்தனமாக பச்சை மரங்கள் தறிக்கப்பட்டு வருவதும், தொழிற்சாலைகள், வீடுகள்பாதைகள் அமைப்பதற்காக காடுகள் அழிக்கப்பட்டு வருவதும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இவையெல்லாம் எதிர்காலத்தில் வறட்சி என்ற கொடூரத்தை எமக்கும், எமது சந்ததியினருக்கும் கொடுக்கப் போகிறது என்பதில் துளியும் சந்தேகம் இல்லை.

மக்களின் நீர் துஷ் பிரயோக நடவடிக் கைகளும், மக்கள் மத்தியில் நீர் முகாமைத்துவம் பற்றியபோதிய அறிவின்மையும் நீர்வளம் குறைந்து செல்வதற்கு இன்னுமொரு காரணமாக இருக்கிறது. தேவைக்கு அதிகமாக நீரைப் பயன்படுத்துவது, குளிக்கும்போது வேறு தேவைகளுக்காக நீரைப்பயன்படுத்தும் போது, விரயமாகும் நீரை வாய்க்கால்கள், வரம்புகள் கட்டி பயிர்கள், செடிகள், மரங்கள், என்பவற்றைச் சென்றடைய விடாது, கண்டபடி சிந்த வைத்தும், சாக்கடை நீராகத் தேக்க வைத்தும், நீரினைத் துஸ்பிரயோகம் செய்வதும் நம்மத்தியில் வழக்கமாகிவிட்டது. இது எமக்கு நாமே படுகுழி தோண்டுவதற்கு ஒப்பாக இருக்கிறது என்று கூறுவதில் மிகையேதும் இல்லை. அத்துடன் குடிப்பதற்காக குழாய்கள் ஊடாக விநியோகிக்கப்படும் நீரை- குளிப்பதற்கும், கழுவுவதற்கும் பயன்படுத்தப்படும் சோம்பேறிகளும் நம் மத்தியில் இருக்கத்தான் செய்கின்றார்கள். நமது பிரதேசத்தில் உள்ள பல குளங்கள்கூட, வரம்புகள், அணைகள் என்பவை இல்லாமல், அவை சேதப்பட்டு உடைந்து இருக்கின்றதை நாம் காண்கின்றோம். சம்பந்தப்பட்ட அதிகாரிகளினதும், அரசியல்வாதிகளினதும், அமைச்சர்களினதும் அசமந்தப் போக்கால், பல குளங்கள் ஆழம் குறைந்து, அணைகள் இன்றி, வலுவிழந்து நிலை குலைந்து போயுள்ளமை வருத்தம் தருகின்ற விடயமாக இருகிறது. இதன் காரணத்தால் மழைக் காலங்களில், குளங்களில் நீர் சேகரிக்க முடியாமற்போவதால்- கோடை காலங்களில் பயிற்ச் செய்கைகளின் போது, விவசாயிகள் குளங்களிலிருந்து நீரைப் பெறமுடியாமல், வயல்களுக்கு கிணறுகளில் இருந்து இறைக்கின்ற நிலை உருவாகிறது. இது நிலத்தடி நீர் மட்டத்தை கீழ் நோக்கி இறங்க வைப்பதற்கு காரணமாக அமைகிறது .

யாழ்ப்பாணத்தில் கூட பல வாய்க்கால்கள் சீர்செய்யப்படாது, அதனுள் வெளியேற்றப்படும் நீர் குளங்களையோ, கடல்களையோ சென்றடைய முடியாமல் தேங்கிக் கிடந்து, துர்நாற்றம் வீசுவதை நாம் கண்டு கொண்டுதான் இருக்கிறோம். மழைக் காலங்களின் போது, வெள்ளமாக வெளியேறும் நீர் - வாய்க்கால்களை சென்றடைந்து, அதனூடாக குளங்களை அடைந்தால் கோடை காலங்களில் அவை எவ்வளவு பிரயோசனமாக இருக்கும் என்பதை ஏன்தான் அறியாமல் இருக்கிறார்கள்.

எது எப்படியோ..., இன்று நம் மத்தியில் நீர் பற்றியும், நீர் முகாமைத்துவம் பற்றியும் போதியளவு விழிப்புணர்வு வேண்டும். புத்தி ஜீவிகள், நீரியல் திணைக்கள உத்தியோகத்தர்கள் போன்றோர் மக்களை நோக்கி இறங்கி வரவேண்டும். எதிர்கால சந்ததியினருக்காக இரங்கி வரவேண்டும். கருத்தரங்குகள், துண்டுப் பிரசுரங்கள் ஊடகங்கள் போன்றவை ஊடாக நீர் முகாமைத்துவம் பற்றிய அறிவை ஊட்டுவதற்கு முன் வரவேண்டும்.

அத்துடன் மாற்று வழிகளை நாம் மேற்கொள்ளுவதும், ஒரு மிகமிக முக்கிய விடயமாகும். மேலைத் தேயங்களைப் போல் கடல் நீரை குடிநீராக மாற்றும் இயந்திரங்கள் நம் தேசத்துக்குக் கொள்வனவு செய்யப்பட்டால், நம் மத்தியில் உள்ள குடிநீர்ப் பிரச்சினை குறையும். ஆனால் இவற்றுக்குரிய செலவுகள் அதிகம் என்பதால், மழை நீரினைச் சேகரித்துப் பயன்படுத்துவது மிகமிகப் பொருத்தமாக இருக்கிறது. போதியளவு மழை நீர்ச் சேகரிப்புத் தொட்டிகள் அமைத்து, அதன் மூலம் மழை நீரைச் சேகரித்து, வடிகட்டி, சுத்திகரித்துப் பயன்படுத்தினால் எதிர்காலத்தில் நீர்ப் பஞ்சம் ஏற்படுவதை எண்ணிக் கவலைப்படத் தேவையில்லை. அத்துடன் மரங்களை மீள நட்டும், காடுகளில் உரிய பாதுகாப்புகளை மேற்கொண்டு, மரங்கள் தறிக்கப்படாமல் கண்காணிப்புக்களில் ஈடுபட்டு, கட்டுப்பாடுகளை விதித்து, வன வளத்தைக் குறையாமல் பாதுகாத்தும், குளங்கள், வாய்க்கால்கள் என்பவற்றை ஆழமாக்கி, அணைகள் கட்டி அதன் மூலம் நீரைச் சேகரித்தும், நீர் துஷ்பிரயோகங்களைத் தடுத்தும் வருவது எமது உடனடிக் கடமையாக உள்ளது. பசுமைப் புரட்சி என்பது போல், வறட்சிக்கு எதிராக நாம் முன்கூட்டியே புரட்சியினை மேற்க்கொள்ளுவது கட்டாய தேவையாக இருக்கிறது. எதிர்காலத்தில் எமது சந்ததியினர் "தண்ணீர்.....தண்ணீர்...." என்று அவலப்படாமல், இன்றே விழிப்படைவோம். இதற்காகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மக்களை நோக்கி, கடமையுணர்வுடன், தேச பக்தியுடன் நடக்க வேண்டும். அல்லாவிட்டால் நீர் மட்டம் குறைந்து வறட்சி ஏற்படுவதும், நன்னீர் உப்பு நீராக மாறுவதும் தவிர்க்கப்பட முடியாமல் போகும் நிலை உருவாகும் என்பது திண்ணம்.

-வீ.ஏ.விந்தன்.

# பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு; அறுவர் பலி, 40 பேர் காயம்!

இஸ்லாமாபாத்

அமெரிக்காவின் தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைக்கு பாகிஸ்தான் ஆதரவளித்துவருகிறது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தீவிரவாத அமைப்புகள் அவ்வப்போது பாகிஸ்தானில் வன்முறைகளில் ஈடுபட்டுவருகின்றன.

இந்த நிலையில் லாகூரில் உள்ள மினார் - இ - பாகிஸ்தான் நினைவுச்சின்னம் அருகே நிறுத்தப்பட்டிருந்த சைக்கிளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் வீதியில் வியாபாரம் செய்த இருவர் கொல்லப்பட்டனர்.

சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு அருகிலுள்ள பஸ் நிலையத்தில் நின்றவர்கள் 8 பேர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் நடந்த ஒரு மணி நேரத்துக்குள் லாகூரின் மத்திய பகுதியில் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள வர்த்தக





நிலையப் பகுதியில் மற்றொரு குண்டுவெடிப்பு நிகழ்ந்தது. இதில் அப்பாவிப் பொதுமக்கள் நான்கு பேர் பலியாகினர். 32 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாகவுள்ளது. பலியானவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அதிகாரிகள் அச்சம் தெரிவித்தனர்.

பாகிஸ்தான் தகவல் தொடர்பு அமைச்சர் ஷேக் ரஷீத் அகமட் குண்டுவெடிப்புச் சம்பவத்துக்குக் கடும் கண்டனம் தெரிவித்ததுடன் குண்டுவெடிப்புக்குக் காரணமானவர்கள் பாகிஸ்தானின் எதிரிகள் என்றும் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்துக்கு இதுவரை எந்தவொரு அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. குண்டுவெடிப்பு நடத்தியதற்கான காரணமும் தெரியவில்லை என சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி அமீர் ஜுல்பிகர் கூறினார்.

# ஜேர்மனியின் நெரிசல் மிகுந்த வீதியில் திடீரெனப் படமெடுத்த பாம்புகள்!

ஜேர்மனி

மக்கள் நடமாட்டம் மிகுந்த முக்கிய வீதியில் திடீரென நூற்றுக்கணக்கான பாம்புகள் நெளிந்தால் எப்படியிருக்கும்? அப்படி ஒரு அனுபவத்தை ஜேர்மன் மக்கள் நேற்று முன் தினம் பெற்றனர்.

ஜேர்மனியின் முக்கிய நகரங்களில் ஒன்று திலன்பெர்க். இங்குள்ள நெரிசல் மிகுந்த வீதியில் நேற்று முன்தினம் ஏராளமானோர் வாகனங்களிலும் நடந்தும் சென்றுகொண்டிருந்தனர். திடீரென வீதி முழுவதும் பாம்புகள் படமெடுத்தும், நெளிந்தும் ஊர்ந்து கொண்டிருந்தன.

இதைக் கண்டு பீதியில் மக்கள் அங்குமிங்கும் அலறியடித்து ஓடினர். வாகனங்களில் சென்றவர்கள் கதவுகளை இறுக்கமாக சாத்தித் தாழிட்டுக் கொண்டனர். உடனடியாக பொலிஸ் மற்றும் விலங்குகள் மீட்கும் குழுவுக்குத் தகவல் அனுப்பப்பட்டது.

நெரிசலான நகரின் முக்கிய சாலையில், அதுவும் காடு அருகில் இல்லாத நிலையில் நூற்றுக்காணக்கான பாம்புகள் திடீரென்று வருவது எப்படிச் சாத்தியம்?

திலன் பெர்க் நகரின் ஒரு பகுதியில் உள்ள பாம்புப் பண்ணையில் இருந்து மற்றொரு வனவிலங்குப் பூங்காவிற்கு பாம்புகளை ஏற்றிச் சென்ற வாகனம், நட்ட நடுவீதியில் தடம் புரண்டதில் வந்த வினை இது!

வாகனம் கவிழ்ந்ததும் அதில் அடைக்கப்பட்டிருந்த பாம்புகள் வீதியில் நெளிந்தன. அங்கிருந்த கடைகள், வாய்க்கால்கள், தொலைத் தொடர்பு நிலையங்கள் எங்கும் படையெடுத்தன.

இதனால், அங்கிருந்தவர்கள் வீதியை நோக்கி ஓட, வீதியில் சென்றவர்கள் நாலாபுறமும் சிதறி ஓட, அந்தப் பகுதியே கூச்சலும் அலறலுமாக மாறியது.

வீதியில் போக்குவரத்து ஸ்தம்பித்தது. விரைந்து வந்த மீட்புக் குழுவினர் பாம்புகளைப் பிடித்து பெட்டிக்குள் போடப்போட அதிகாரிகள் ஒன்று, இரண்டு என எண்ணியபடி கணக்கைச் சரிபார்த்துக் கொண்டிருந்தனர்.

# நாடாளுமன்றில் குடைபிடித்த ருமேனிய நாட்டு எம்.பிக்கள்!

ருமேனியா

ருமேனிய நாட்டிலுள்ள நாடாளுமன்றக் கட்டடம் சமீபத்தில்தான் புதுப்பிக்கப்பட்டது. நேற்று மழை பெய்தபோது நாடாளுமன்றக் கட்டடத்தின் கூரை ஒழுகத்தொடங்கியது. அப்போது சபையில் எம்.பிக்கள் விவாதத்தில் ஈடுபட்டு இருந்தனர். கூரையில் இருந்து மழைநீர் ஒழுகியதும் எம்.பிக்கள் இடம்மாறி அமர்ந்தனர். குடைகொண்டுவந்த சில எம்.பி.க்கள் அதை விரித்துப்பிடித்துக் கொண்டனர்.

இந்த நிலைக்காக முன்னாள் சர்வாதிகாரி நிக்கோல்லை சிலர் குற்றஞ்சாட்டினர். சிலர் நாடாளுமன்றத்தை புதுப்பிக்க ஒப்பந்தம் எடுத்திருந்த கம்பனியை குற்றஞ்சாட்டினர். 30 மணி நேரம் மழை பெய்ததால் கழிவுநீர்க் குழாயால் சமாளிக்க முடியாமல் போய்விட்டது என்று ஒப்பந்தகாரர் கூறினார்.

இந்த கட்டடம் 1984 ஆம் ஆண்டு முதல் 1989 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் 400 கட்டடக் கலைஞர்களால் 20 ஆயிரம் தொழிலாளர் களைக் கொண்டு கட்டப்பட்டது. இதில் 6 ஆயிரம் அறைகள் உள்ளன.

# மாவோ கிளர்ச்சிவாதிகளால் 60 மாணவர்கள் கடத்தல்!

காத்மண்டு

நேபாளத்தில் மன்னர் ஆட்சிக்கு எதிராக மாவோ கிளர்ச்சிவாதிகள் ஆயுதம் ஏந்திப் போராடி வருகின்றனர். கிளர்ச்சிவாதிகளுக்கும் இராணுவத்துக்குமிடையே நடந்துவரும் மோதலில் இதுவரை 15 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பலியாகிவிட்டனர்.

இந்த நிலையில் தலைநகர் காத்மண்டுவுக்கு வடமேற்கே 475 கிலோமீற்றர் தொலைவில் டோல்பா மாவட்டத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கிளர்ச்சிவாதிகள் திடீரென்று நுழைந்தனர். அங்குள்ள 60 மாணவ - மாணவிகளை அவர்கள் கடத்திச் சென்றனர்.

கடத்தப்பட்ட இந்த மாணவர்கள் 6 முதல் 10 ஆம் வகுப்புவரை படிப்பவர்கள். அவர்களுக்குத் தீவிரவாத பயிற்சி கொடுத்து தங்கள் இயக்கத்தில் சேர்க்கவுள்ளனர்.

இவேளை, இன்னும் இரண்டு ஆண்டுகளில் நேபாளத்தில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும் என்று நேபாள அரசு அறிவித்துள்ளது. அதற்கு முன்னதாக அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் நகரசபைத் தேர்தல்கள் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.




## நளினியின் மகளுக்கு விசா வழங்க

# 6 வாரத்தில் இந்திய தூதரகம் முடிவினை எடுக்க வேண்டும்!

## சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு

சென்னை

நளினியின் மகள் மேகராவுக்கு விசா கோரிய மனு மீது ஆறு வாரத்தில் முடிவு எடுக்க இந்திய தூதரகத்துக்கு சென்னை உயர்நீதிமன்று உத்தரவு பிறப்பித்தது.

ராஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை பெற்றவர் நளினி. பின்னர் இவரது தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. இதே வழக்கில் தூக்குத் தண்டனை பெற்ற மற்றொரு குற்றவாளியான முருகனுக்கும் நளினிக்கும் முன்பிருந்தே காதல் இருந்தது. அதன் பலனாக நளினி கர்ப்பமுற்றார். அவர் சிறையில் இருந்தபோது 21.01.1992 அன்று ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதற்கு மேகரா என்று பெயரிட்டு சிறையில் தன்னுடனேயே வளர்த்து வந்தார். அந்தக் குழந்தைக்கு 6 வயதான நிலையில் சிறையில் இருக்க அனுமதி இல்லாத காரணத்தால் முருகனின் தாயாருடன் இலங்கை செல்ல அனுமதிக்கப்பட்டார். தற்போது 13 வயதுடைய மேகரா 9 ஆம் வகுப்பு படித்து வருகிறாள்.

இந்த நிலையில் தாயாரைப் பார்க்க இந்தியா வருவதற்கு மேகரா இந்திய தூதரகத்தில் விசா கேட்டு விண்ணப்பித்திருந்தார். ஆனால் இதுவரை இந்திய தூதரகம் விசா வழங்கவில்லை. கடந்த 15.04.2004 அன்று ஒரு மனு தாக்கல் செய்தார். இந்த மனு மீதும் இந்திய தூதரகம் நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் நளினி சார்பாக சட்டத்தரணி இளங்கோவன் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தார்.

இந்த மனு, நீதிபதி டி.முருகேசன் முன் விசாரணைக்கு வந்தது. அப்போது மத்திய அரசு சார்பாக மணிக்குமார் ஆஜராகி நளினி மனுமீது முடிவு அறிவிக்கத் தயாராகவுள்ளோம் எனவே அவகாசம் தரவேண்டும் என்று கூறினார்.

இதற்கு நளினி சார்பாக ஆஜரான சட்டத்தரணி எஸ்.துரைசாமி ஏற்கனவே இதில் ஓராண்டு அவகாசம் கொடுத்தாகிவிட்டது. இனிமேல் அதிக அவகாசம் தரக்கூடாது என்று கூறினார். இதைக்கேட்ட நீதிபதி விசா தரக் கோரி நளினி 15.04.2004 அன்று கொடுத்த மனு மீது இந்திய தூதரகம் 6 வாரத்தில் விசாரணை நடத்தி முடித்து முடிவு அறிவிக்கவேண்டும் என்று உத்தரவிட்டார்.

# வியாபாரத்தை அதிகரிப்பதற்கு விண்வெளியில் விளம்பரப்படம்!

ரோக்கியோ

விண்வெளி நிலையத்தில் விளம்பரப் படம் எடுத்து வியாபாரத்தை பெருக்க ஜப்பானின் நூடில்ஸ் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இதற்காக எதிர்வரும் முதலாம் திகதி பிரத்தியேக கமராக்களுடன் ரஷ்ய ரொக்கெட் ஒன்று சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு அனுப்பப்படவுள்ளது. அங்கு ரஷ்ய விண்வெளி வீரர்கள் ஜப்பான் நூடில்ஸை விரும்பி உண்பது போல படம் எடுக்கப்படும். ஜப்பானின் கப் நூடில்ஸுக்கு எல்லைகள் இல்லை என்பதை விளக்கும் வகையில் அந்த விளம்பரம் அமையும்.

இந்த விளம்பரப் படத்தை ரஷ்யவின் விண்வெளிக் கட்டுப்பாட்டு மையம் மொஸ்கோவிலிருந்து கண்காணித்துப் பதிவுசெய்யும். ஜப்பானின் விண்வெளி அமைப்பான ஜாக்ஸா அதற்கான அறிவிப்பை ரோக்கியோவில் கடந்த புதன்கிழமை வெளியிட்டது.

விண்வெளியில் படப்பிடிப்பு நடத்துவதற்கான திறன்வாய்ந்த கமராக்களும் அதற்குரிய சிறப்பு அமைப்புகளும் செய்யப்படும். நிஸின் உணவு தயாரிப்பு நிறுவனம் இந்த விளம்பரத்தைத் தயாரிக்கிறது. இதற்கு எவ்வளவு செலவாகும் என்ற விபரத்தை அந்த நிறுவனம் வெளியிடவில்லை.

# நூறு நிமிடத்தில் படிக்கும் சுருக்கப்பட்ட பைபிள்!

இங்கிலாந்தைச் சேர்ந்த கிறிஸ்தவ பாதிரியார் ஒருவர் புனித நூலான பைபிளை மிகவும் சுருக்கி எழுதியுள்ளார். சாதாரணமாக பைபிளை படித்து முடிக்க பல மணி நேரம் பிடிக்கும். ஆனால் சுருக்கப்பட்ட பைபிளை படிக்க 100 நிமிடங்களே ஆகும். பைபிளை மிகவும் சுருக்கி எழுதியதற்கு எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

# 78 அடி உயரத்தில் கயிற்றில் சாகசம்!



சீனாவின் ஜினான் பகுதியில் வசிக்கும் கூழைக் கூத்தாடியின் 8 வயது மகள் நேற்று 78 அடி உயரத்தில் கட்டப்பட்ட கயிற்றில் நடந்து சாகசம் செய்தார்.

இவர் கயிற்றில் நடக்கும் வித்தையை தனது 2 ஆவது வயது முதலே பழகத்தொடங்கியமை குறிப்பிடத்தக்கது.

# நிர்வாண நடைப்பயணம்

இங்கிலாந்தைச் சேர்ந்த முன்னாள் கடற்படை வீரரான ஸ்ரீபன் கோக் (வயது 46) நிர்வாணமாக இங்கிலாந்தைச் சுற்றிவரும் பயணத்தை 2003 ஆம் ஆண்டு தொடங்கினார்.

நிர்வாண நடைப்பயணமாக ஆயிரத்து 363 கி.மீ. தூரத்தைக் கடந்தார். அப்போது பொலிஸார் அவரை 14 முறை கைது செய்தனர். இதற்காக 2 முறை சிறைத் தண்டனை பெற்றார். தண்டனைக் காலம் முடிந்து நேற்று முன்தினம் எடின்பர்க் நகரச் சிறையிலிருந்து விடுதலையானார்.

சிறையிலிருந்து விடுதலையானதுமே நிர்வாணமாக நடந்தபடி இங்கிலாந்தைச் சுற்றிவரும் பயணத்தை தொடங்கிய அவரைப் பொலிஸார் மீண்டும் கைது செய்தனர்.

# காதலியை கைபிடிக்கும் இளவரசர் வில்லியம்!

லண்டன்



இங்கிலாந்து இளவரசர் சாள்ஸின் மூத்த மகன் வில்லியம் கல் லூரி படிப்பை முடித்துவிட்டு சமூக சேவையில் இப்போது அதிக ஆர் வம் காட்டுகிறார். இடையிடையே தனது காதலி கேக் மிடில்டனையும் ரகசியமாகச் சந்தித்து வருகிறார்.

இந்த ரகசிய சந்திப்பு குறித்து கிசு கிசு அதிகமாக வெளிவருவதால் பகிரங்கமாகவே இருவரும் பொது நிகழ்ச்சிகளில் சேர்ந்து வர தீர்மானித்திருப்பதுடன், இருவரும் விரைவில் திருமணம் செய்துகொள்ளவும் முடிவு செய்திருக்கிறார்கள்.

விரைவில் திருமண நிச்சய தார்த்தம் நடைபெறும் என்று ராணி குடும்பத்தைச் சேர்ந்த ஒரு அதிகாரி தெரிவித்தார்.

இளவரசர் வில்லியத்துக்கு 23 வயது ஆகிறது. இவரது காதலிக்கும் 23 வயது ஆகிறது. தனது பாட்டி ராணி எலிசெபத்துக்கும் தந்தை சாள்ஸுக்கும் காதலி கேக் மிடில்டனை இன்னும் வில்லியம் அறிமுகப்படுத்தவில்லை.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
*The Leading Daily of Tamils' Homeland*

# பொதுக்கொள்கையுடன் புலிகளுடன் பேச மக்கள் ஆணையைக் கோருகிறார் ரணில்!

கொழும்பு —

சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணைந்து பொதுக்கொள்கை ஒன்றை உருவாக்கி விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மக்களின் ஆணையை வேண்டி நிற்பதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்துஸ்தான் ரைம்ஸ் பத்தரிக்கைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

சமாதானத்தையும் இனப்பிரச்சினைக்கான தீர்வையும் தனித்து ஒரு கட்சியால் ஏற்படுத்த முடியாது. எனவே இந்த முயற்சியில் நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

கடந்த தேர்தலில் விடுதலைப் புலிகளுடன் நான் பேசுவதற்கு மக்கள் ஆணை தந்தனர். இந்தத் தேர்தலில் நான் சுதந்திரக்கட்சியுடன் பேச்சு நடத்தி பொதுவான கொள்கையைத் தயாரிக்க மக்கள் ஆணை தரவேண்டும். ஏனைய கட்சிகளும் இந்தப் பேச்சுக்களில் பங்குபற்றலாம்.

ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதே எனது தேசியக் கொள்கையாகும் என அவர் தெரிவித்தார்.

## புலிகளின்...

அந்தப் பகுதி மக்கள் வாக்களிக்க அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்.

அவர்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வந்து வாக்களிப்பதற்கு போக்குவரத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

தேர்தலுக்கென 10486 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. சிலவேளைகளில் இந்த எண்ணிக்கையில் மாற்றங்கள் ஏற்படலாம்.

தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கென ஐ.நா., ஐரோப்பிய ஒன்றியம், பொதுநலவாய நாடுகள் மற்றும் தேர்தல் அதிகாரிகள் சங்க தேர்தல் கண்காணிப்பாளர்கள் ஆகியோருக்கு உத்தியோகப்பற்றற்ற ரீதியில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பவ்ரல் அமைப்பு மற்றும் உள்நாட்டு கண்காணிப்பு நிலையங்களும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளன.

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டுமென்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளபோதிலும் அந்தத் தீர்ப்பின் சில விடயங்களை நான் விரும்பவில்லை.

எனினும், நாட்டினதும் நாட்டு மக்களினதும் நலனைக் கருத்திற்கொண்டு நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கமைய தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துவருகிறேன்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 17 ஆம் திகதி வாக்களிப்பின்போது வன்முறைகள் இடம்பெற்றால் நவம்பர் 19 ஆம் திகதி மறுவாக்குப் பதிவு நடத்தப்படும். மறுவாக்குப் பதிவு நடத்தப்பட்டால் தேர்தல் முடிவு திகதி வெளியிடப்படுவது ஒத்திப்போடப்படும்.

ஜனாதிபதித் தேர்தலுடன் நாடாளுமன்றுக்கான தேர்தலையும் நடத்த வேண்டிய சூழல் ஏற்பட்டால் இரண்டு தேர்தல்களையும் ஒரேநாளில் நடத்த தேர்தல் திணைக்களம் தயாராகவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# கோவில் கிணற்றிலிருந்து வயோதிபரின் சடலம் மீட்பு

பருத்தித்துறை —

பருத்தித்துறை - தம்பசிட்டி மாயக்கை பிள்ளையார் கோவில் கிணற்றுக்குள்ளிருந்து வயோதிபர் ஒருவரின் சடலம் அந்தப்பகுதி மக்களால் கண்டெடுக்கப்பட்டு மந்திகை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

இவ்வாறு மீட்கப்பட்ட சடலம் தம்பசிட்டி மாயக்கைப் பகுதியைச் சேர்ந்த சின்னத்தம்பி ஆறுமுகம் (வயது 75) என்பவருடையதென அடையாளம் காணப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 6 மணியளவில் கோவில் கிணற்றில் தண்ணீர் அள்ளச்சென்ற அந்தப்பகுதி மக்கள் சடலம் ஒன்று இருப்பதைக்கண்டு அதனை மீட்டெடுத்து மந்திகை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

இவர் மதுபோதையில் இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இவர் கிணற்றினுள் நீர் எடுக்கச் சென்றவேளை தவறி வீழ்ந்து மரணமடைந்திருக்கலாமென பிரேதப் பரிசோதனை மேற்கொண்ட வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி க.கதிரவேற்பிள்ளை தெரிவித்தார்.


மரண விசாரணையை பருத்தித்துறை மாவட்ட பதில் நீதிவான் ந. தங்கராசா மேற்கொண்டார். விசாரணைகளின்பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (14)

# சுனாமி நிவாரண விநியோக தடங்கலுக்கு இலங்கையில் அரசியல் குழப்பம் காரணம்

## கிளின்ரன் சொல்கிறார்

வொஷிங்ரன் —

கடந்த வருடம் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகள் சென்றடைவதில் இலங்கையில் உள்நாட்டு அரசியல் பிரிவினைகள் காரணமாக தடங்கல்கள் ஏற்பட்டுள்ளதாக - அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியும், சுனாமி நிவாரணத்துக்கான ஐ.நாவின் தூதுவருமான பில் கிளின்டன் தெரிவித்தார்.



பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அந்தப் பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது -

விடுதலைப்புலிகள் மற்றும் முஸ்லிம்களுடன் சுனாமி நிவாரண உதவிகளைப் பகிர்ந்துகொள்ள இலங்கை அரசு ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதிலுள்ள காலதாமதம் காரணமாகபாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி எதுவும் கிடைக்கவில்லை.

இந்த ஒப்பந்தத்தை இலங்கை உயர் நீதிமன்றம் இடைநிறுத்துமாறு கடந்த ஜூலை மாதம் பிறப்பித்த உத்தரவு கவலைக்குரிய விடயம் என அவர் அந்தப் பேட்டியில் மேலும் தெரிவித்தார்.

# யுத்தத்தைத் தூண்டும் செயற்பாட்டில்...

தொடர்பாக இந்த வாரம்கூடி ஆராய்ந்துள்ளன.

2002 ஆம் ஆண்டு போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது முதல் தற்போதுதான் மிகவும் ஆபத்தான நிலையை ஒப்பந்தம் எதிர்நோக்கியுள்ளதாகவும் அந்த நாடுகள் கவலை தெரிவித்தன.

இலங்கை வன்முறை குறித்த சர்வதேச சமூகத்தின் உணர்வுகள் புரிந்துகொள்ளத்தக்கதே. தமிழ் துணைப்படை ஆயுதக் குழுக்களை களைந்து, போர் நிறுத்தத்தை செயல்படுத்தவேண்டும் என்று இணைத் தலைமை நாடுகள் வலியுறுத்தியிருப்பது வரவேற்கத்தக்கது. போர்நிறுத்த ஒப்பந்தத்தைத் தொடரச் செய்வதற்கான முக்கியமான வலியுறுத்தல் இது.

தமிழீழ விடுதலைப்புலிகளும் தற்போது கூட இலங்கை அரசுடன் உடனடிப் பேச்சுகளுக்கு தாங்கள் தயார் என்று அறிவித்துள்ளனர். பாதுகாப்புக் காரணங்களைக் கருத்திற்கொண்டு தங்களது நிர்வாகப் பகுதியிலோ அல்லது நடுநிலைமை நாடு ஒன்றிலோ இப்பேச்சுக்கள் நடத்தப்படவேண்டும் என்றும் விடுதலைப்புலிகள் வலியுறுத்தி வருகின்றனர். ஆயுதக்குழுக்களின் ஆயுதங்களை அரசு களைய வேண்டும் என்று இணைத் தலைமை நாடுகள் கூறியிருப்பதன் மூலம் தமிழீழ விடுதலைப்புலிகளின் பாதுகாப்புக் குறித்த கவலையை அந்த நாடுகள் புரிந்துகொண்டிருக்கக் கூடும்.

நடுநிலைமை நாடு ஒன்றில் பேச்சுக்கள் நடத்துவதன் மூலம் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு சட்டபூர்வமான அங்கீகாரம் கிடைத்துவிடும் என்று கூறி பேச்சுக்களிலிருந்து அரசு விலகிக்கொள்ள முயற்சிக்கிறது. இது சிறுபிள்ளைத்தனமான கபடத்தனமாகும்.

விடுதலைப்புலிகளுக்கு சட்டபூர்வமான அங்கீகாரம் கிடைத்துவிடுமோ என்ற சந்தேகத்துடன் அரசு இருப்பது போர்நிறுத்த ஒப்பந்தத்தை சிதைப்பதாகும். அப்படியான நிலையில் அமைதிப் பேச்சுக்கள் மீதோ அரசியல் வழி தீர்விலோ எப்படி நம்பிக்கை வரும்?

அமைதிப் பேச்சுக்கள் தொடர்பான இத்தகைய குழப்பங்கள் நீடிக்கின்ற நிலையில் போர்நிறுத்த ஒப்பந்தத்தின் ஆயுட்காலம் அல்லது தமிழீழ விடுதலைப்புலிகளின் நிலை என்பது அடிப்படையான விடயம்.

வடக்கு - கிழக்கில் உள்ள துணைப்படைகளின் ஆயுதங்களை களைந்துவிடுவதால் மட்டு. வன்முறைகள் நின்றுவிடப்போவதில்லை. தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான நிழல் யுத்தத்தை அரசானது வளர்த்தெடுக்காத வரையில் இரு தரப்பினரும் எதிர் எதிரே பேச்சு மேசையில்அமர்ந்து பேசினாலும் எந்தத் தீர்வையும் எட்டிவிட முடியாது.

இரு தரப்பினரும் அடுத்தமாதம் நோர்வே விசேட தூதுவர் ட்ரொன்ட் புறூவ் ஹொவ்டேயுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளனர். கருணா உள்ளிட்ட ஆயுதக்குழுக்களை இராணுவம் ஆதரிக்கவில்லை என்று கொழும்பு வன்மையாக மறுப்புத் தெரிவித்தாலும் -

அக்குழுவினருக்கு அவர்கள் இன்னும் இடமளித்து வருகிறார்கள். இராணுவத்தினரின் இந்த மறைமுக ஆதரவு தொடர்பான விவாதத்தை விரும்பாத நிலையில்தான் பேச்சுக்களுக்கான இடம் குறித்த குழப்பத்தை அரசு உருவாக்கி வருகிறது.

ஆகையால் சர்வதேச சமூகமானது அரச கட்டுப்பாட்டுப் பகுதி களில் உள்ள துணைப்படைகளின் ஆயுதங்களைக் களையவேண்டும் என்று பாரிய அழுத்தம் கொடுத்து முழு அளவில் அதைச் செயற்படுத்த வைக்க வேண்டும்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு கூட்டாட்சி மூலமே தீர்வு காணமுடியும் என்று இணைத்தலைமை நாடுகள் வலியுறுத்தியுள்ளன. ஆனால், பிரதமர் மகிந்த ராஜபக்ஷவோ நாட்டைப் பிளவுபடுத்த அனுமதிக்கமாட்டோம் என்றே கூறிவருகிறார். சர்வதேச நாடுகளாலும் சிறுபான்மை மக்களாலும் கூறப்பட்டுவருகிற கூட்டமைப்பு முறையிலான தீர்வு என்பது நாட்டைப் பிளவுபடுத்துகிற விடயம் இல்லை.

சுனாமி பொதுக்கட்டமைப்பை உதாசீனப்படுத்தி வருகிற நிகழ்வானது - அமைதி முயற்சிகளின் ஒவ்வொரு நகர்விலும் தாக்கத்தையே ஏற்படுத்தும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மக்களுக்கு சிறிதளவு உதவிகளே சென்றடைந்துள்ளன. ஆனால், தென்னிலங்கையைப் பொறுத்தவரையில் பாரியலாபம் அடைந்துள்ளது. சர்வதேச உதவிகள் மட்டுமல்ல மறைமுகமாக பாரிய அன்னிய முதலீடுகள் மூலமும் அரசு பலனடைந்துள்ளதுஎன்பதேஉண்மை.

இதனிடையே தமிழீழ விடுதலைப் புலிகள், போர் நிறுத்த ஒப்பந்த காலத்தில் தங்களது ஆயுதபலத்தை அதிகரித்துக் கொண்டதாக தீவிரவாத இயக்கமான ஜாதிக ஹெல உறுமய மீண்டும் கூறியுள்ளது.

தென்னிலங்கை அரசியல்வாதிகள் விடுதலைப்புலிகளின் பலம் குறித்து தவறாக மதிப்பட்டு வைத்துள்ளனர். போரை நடத்தினால் வெற்றி பெறுவோம் என்று வாதிட்டுவருகின்றனர்.

இராணுவ வழித் தீர்வுக்கான முயற்சிகளை மீண்டும் அரசு மேற்கொள்வது நிச்சயமாக நிகழக்கூடியதாக இருக்கும் என்பதை இவை காட்டுகிறது என்று அந்தப் பத்திரிகையில் கூறப்பட்டுள்ளது.

## கொழும்பு...

(வயது 21) என்பவரும் கைதுசெய்யப்பட்டு - விசாரணைகளுக்காக காலி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

# கரு ஜயசூரிய, எஸ்.பி.திஸநாயக்க மாவட்ட தலைவர் பதவியிலிருந்து விலகுவதற்கு மறுப்புத் தெரிவிப்பு

கொழும்பு —

ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்டத் தலைவர் பதவிகளிலிருந்து விலகுமாறு அந்தக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விடுத்த வேண்டுகோளை கரு ஜயசூரிய, எஸ்.பி.திஸநாயக்க ஆகியோரார் நிராகரித்துவிட்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் உதவிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, பிரதித் தலைவர் கரு ஜயசூரிய, தேசிய ஒருங்கிணைப்பாளர் எஸ்.பி. திஸநாயக்க ஆகியோரை கட்சியின் மாவட்ட தலைவர் பதவிகளிலிருந்து விலகுமாறு ரணில் விக்கிரமசிங்க கேட்டுக்கொண்டார்.

கண்டி மாவட்டத் தலைவர் பதவியிலிருந்த திஸ்ஸ அத்தநாயக்க அந்தப் பதவியை நாடாளுமன்ற உறுப்பினர் கெகலிய ரம்புக்வெலவிடம் ஒப்படைத்தார்.

ஆனால் - திஸநாயக்கவும், கரு ஜயசூரியவும் தாங்கள் பதவி விலக முடியாது என்றும் கட்சியின் நிர்வாகக் குழுக்கூட்டத்தில் இந்தப் பிரச்சினையை எழுப்புவோம் என்றும் கூறி வருகின்றனர்.

## நவம்பர்...

தில் செலவினம் ரூபா 1003 பில்லியனாகவும், வழமையான செலவினம் ரூபா 482 பில்லியனாகவும், மூலதனச் செலவினம் ரூபா 520 பில்லியனாக இருக்குமென அவர் தெரிவித்தார். ஏற்கனவே இந்த வரவு - செலவுத்திட்டம் எதிர்வரும் நவம்பர் 10 ஆம் திகதி சமர்ப்பிக்கத் திட்டமிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இராணுவப்...

கின்றனர். இவர்கள் அங்கு இரண்டு மாதங்கள் தங்கியிருப்பர். இதனையடுத்தே புதிய இராணுவப் பேச்சாளராக பிரிகேடியர் நலின் விதாரண பொறுப்பேற்றுள்ளார்.

## அடித்துக்...

அலுமாரியில் இருந்த பணம் மற்றும் நகைகளையும் திருடிக்கொண்டு தப்பிச்சென்றுள்ளனர்.

உறவினர் ஒருவர் மேற்படி வீட்டுக்குச் சென்றவேளை வயோதிபப் பெண் கொலைசெய்யப்பட்டுக் கிடப்பதைக் கண்டு பொலிஸாருக்கு தகவல் கொடுத்தார். சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட னர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த யாழ்.மாவட்ட நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா விசாரணைகளை மேற்கொண்டதுடன் உயிரிழந்தவரின் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்து மாறும் விசேட பொலிஸ் குழுவொன்றை அமைத்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் உத்தரவிட்டார்.

மேற்படி வயோதிபப் பெண்ணின் மகள் வெளியே சென்றிருந்தவேளை- அவர் தனிமையில் இருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

## முகமாலை..

இதேவேளை மாணவர் கைது செய்யப்பட்ட சம்பவமானது யாழ்.பல்கலைக்கழகத்தால் முன்னெடுக்கப்பட்டுவருகின்ற பொங்கு தமிழ்நிகழ்வை குழப்புவதற்கான செயற்பாடாகவே அமைந்துள்ளது.

தமிழீழ தேசிய அரசை சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும் எனக் கோரி மேற்கொள்ளப்பட்டுவருகின்ற பொங்குதமிழ் நிகழ்வில் உணர்வெழுச்சியுடன் கலந்து கொள்வதற்கு பொதுமக்கள் தயாராகி கொண்டிருக்கும் இவ்வேளையில் இராணுவத்தினரின் இத்தகைய செயற்பாடுகள் மூலம் மக்களின் அடிமனதில் பயப்பீதியை ஏற்படுத்தி, பொங்குதமிழ் நிகழ்வில் கலந்துகொள்ளும் மக்களின் தொகையை குறைப்பதற்கான ஓர் நடவடிக்கையை இராணுவத்தினர் திட்டமிட்டுச் செய்து வருகின்றனர்.

இத்தகைய சம்பவங்கள் மூலம் மக்களின் எழுச்சியைக் கட்டுப்படுத்தி மக்களைத் துன்புறுத்தி மேற்கொள்ளப்பட்டுவருகின்ற செயற்பாட்டை இராணுவத்தினர் நிறுத்தவேண்டும்.

பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வுக்கான நாள் நெருங்கிக்கொண்டிருப்பதால் இந்தச் சந்தர்ப்பத்தில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் -

பொங்கு தமிழ் நிகழ்வை குழப்புவதற்கு திட்டமிட்டுச் செய்யப்பட்ட செயலாக உள்ளதாக மாணவர்கள் தெரிவித்துள்ளது.


# மரண அறிவித்தல்

## சின்னராசா சரஸ்வதி

(ஓய்வுபெற்ற நெசவு ஆசிரியை)



புங்குடுதீவு 2 ஆம் வட்டாரம் மாரியம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், கல்வியங்காடு ராணி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னராசா சரஸ்வதி 22.09.05 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் கணபதிப்பிள்ளை - தங்கம்மாவின் அன்பு மகளும், காலஞ்சென்ற முருகேசு - கனகம்மாவின் மருமகளும், சின்னராசாவின் அன்பு மனைவியும், சிவாஜினி, ஸ்ரீசங்கர் ஆகியோரின் அன்புத் தாயாரும், முத்துகிருஸ்ணனின் மாமியாரும், கண்மணி, சின்னம்மா, காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, கார்த்திகேசு, கந்தையா மற்றும் தம்பையா (கனடா), கண்ணம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரியும் பிரசாந், காயத்திரி, நாகவத்சலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக் கிரியைகள் 23.09.2005 (நேற்று) வெள்ளிக் கிழமை நடைபெற்றது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்
கை.ஸ்ரீஸ்காந்தன்
(பேறாமகன்)

இல.65, ராணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(சி-4659)


இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 24.09.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# குருதிக் கொடையாளர்கள் கௌரவிப்பு காலத்தின் கட்டாய தேவையாகும்

## அரச அதிபர் கே.கணேஷ்

யாழ்ப்பாணம் —

மக்களுடைய உயிர்காக்கும் உன்னத சேவையை வழங்கியுள்ள குருதிக்கொடையாளர்களை கௌரவிக்கவேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும். என யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற குருதிக் கொடையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வில் விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் -

குருதிக்கொடை என்பது உயிர் காக்கின்ற பணியாக எமது மக்களுக்கு செய்கின்ற சேவையாகவே கருதமுடிகின்றது. குருதிக்கொடை என்பதை செய்ய எல்லோரும் முன்வருவதில்லை. இந்தப் புனிதமான பணியை செய்த கொடையாளர்களை நாம் என்றும் மறக்க முடியாது.

யாழ்.மாவட்டத்தில் கடந்த காலங்களில் பல இன்னல்களுக்கு மத்தியில் அளப்பரிய சேவையை வைத்தியர்கள் புரிந்து வருகின்றனர்.

வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப்பிரிவில் நோயாளர்கள் அனுமதிக்கப்படுகின்ற போது போதியளவு குருதி இரத்த வங்கியில் இருப்பதன் மூலம் நோயாளர்களது உயிரைக்காப்பாற்றிக் கொள்ள முடியும்.

குருதியை இரத்த வங்கியில் சேமித்து வைத்திருப்பதற்கு எல்லோரும் உதவி செய்ய வேண்டும்.

இலங்கையில் கடந்த வருடம் ஏற்பட்ட சுனாமியால் பாதிக்கப் பட்ட பல உயிர்களை காப்பாற்றுவதற்கு பெரும்பங்காக இருந்தது குருதிக் கொடையாளர்கள் செய்த பெரும் தியாகம் என்று தான் கருதமுடியும்.

குருதிக் கொடையாளர்கள் தேவையான நேரத்தில், தேவையான சேவையை செய்ய வேண்டியது சிறந்த சமூகப்பணியாகும்.

இந்தப் பணி குருதிக் கொடையாளிகள் செய்து இருக்கிறார்கள்.

யாழ்.மாவட்டத்தில் வைத்திய சுகாதார சேவைகளை முன்னெடுப்பதற்கு சகல வழிகளிலும் யாழ்.மாவட்ட செயலகம் உதவியாக இருக்கும் எனவும் தெரிவித்தார்.

## நியாப் திட்டத்தின்கீழ்

# பொது மண்டபங்களை அமைக்கும் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம் —

நியாப் திட்டத்தின் கீழ் பொது மண்டபங்கள் அமைக்க தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் தற்பொழுது பொதுமண்டபங்களை அமைக்கும் பணி ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக நியாப் திட்ட அதிகாரி தெரிவித்தார்.

நியாப் திட்டத்தின் கீழ் பொது மண்டபங்கள் அமைக்கத் தேவையான கிராமங்கள் யாழ். மாவட்டத்தில் பிரதேச செயலர் பிரிவு ரீதியில் அதிகாரிகளால் தெரிவு செய்யப்பட்டிருந்தன. இவ்வாறு தெரிவு செய்யப் பட்ட கிராமங்களிலேயே தற்போது, மக்களின் ஒத்துழைப்புடன் பொது மண்டபங்கள் அமைக்கும் பணி இடம் பெற்று வருகின்றன.

இதேவேளை, நியாப் நிறுவன கிராம அபிவிருத்தி திட்டதின் கீழ் மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள் ஊடாக சுழற்சி முறைக் கடன் வழங்க முன்னோடியாக கிராமத்தில் உள்ள குடும்பங்களை குழுக்களாகச் சேர்த்து சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஆற்றுப்படுத்தல் கருத்தரங்குகள்

பருத்தித்துறை —

'சுனாமியால் பாதிக்கப்பட்ட பெண்களும், அரங்க செயற்பாடும்' எனும் தலைப்பில் மகளிர் அபிவிருத்தி நிலையம் சுனாமியால் பாதிக்கப்பட்டு மன உளைச்சலுக்கு உள்ளான பெண்களை ஆற்றுப்படுத்தும் நோக்கில் - குடத்தனை முதல் தொண்டமானாறு வரையான பகுதிகளில் பல ஆற்றுப்படுத்தல் நிகழ்வுகளை நடத்தி வருகின்றது.

இந்தத் தொடரில் இன்று வியாபாரி மூலை பருத்தித்துறையில், கடற்தொழிலாளர் சங்கத்துடன் இணைந்து இந்தக் கருத்தரங்கை இந்தக் கிராமத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் சரோஜா சிவச்சந்திரன், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை உப அதிபர் இந்திராணி மற்றும் கிருஸ்ணவேணி சூரியா ஆகியோர் கலந்து கொள்வர்.

இந்தத் தொடரின் நிகழ்வாக செயற்திறன் அரங்க குழுவினரால் 'கல்லின் கசிவு' எனும் நாடகமும் அரங்கேற்றப்படவுள்ளது.

# சுனாமியால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களிடையே சித்திரப் போட்டி

ஆழியவளை —

சுனாமியால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான சுனாமிக்குப் பின்னரான சித்திரப்போட்டி ஒன்றை 'நாம் ஒன்று பட்டு எழுவோம்' என்ற கருப்பொருளில் கல்வி அமைச்சு நடத்தவுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்கள் மாத்திரமே இந்தப் போட்டிகளில் பங்குபற்ற முடியும்.

போட்டிகள் ஆரம்பப் பிரிவு, கனிஷ்ட பிரிவு, சிரேஷ்ட பிரிவு என 3 பிரிவாக நடத்தப்படவுள்ளது. ஒரு மாணவன் இரண்டு காட்சிப் பொருட்களை சமர்ப்பிக்கலாம்.

தேசிய மட்டப் போட்டிகள் ஒக்ரோபர் மாதம் 06 ஆம்திகதி கொழும்பில் நடைபெறும்.

முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்கள் வெளிநாட்டுச் சுற்றுலா ஒன்றுக்கு அழைத்துச் செல்லப்படுவர். நான்காவது முதல் ஐம்பதாவது இடங்களைப் பெறுபவர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா வழங்கப்படும் அதற்கு மேல் நூறாவது இடம் வரை இடங்களைப் பெறுபவர்களுக்கு தலா 2ஆயிரம் ரூபா வழங்கப்படும். இந்த விடயம் சம்பந்தமான சுற்று நிருபம் சுனாமியால் பாதிக்கப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு அனுப் பப் பட்டுள்ளது. (122)

# இலவச மருத்துவ முகாம்

தீவகம் —

தீவக வட்ட லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச மருத்துவ முகாம் இன்று காலை 9 மணிமுதல் பிற்பகல் 1.30மணிவரை அல்லைப்பிட்டி பராசக்தி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த மருத்துவ முகாமில் நீரிழிவுப் பரிசோதனையும், கண் பரிசோதனையும், மேற்கொள்ளப்பட்டு இலவச மருந்தும் கண்ணாடியும் வழங்கப்படுவதுடன் ஆலோசனையும் வழங்கப்படும். பொது வைத்தியப் பரிசோதனை, இலவச மருந்து வழங்கல், இரத்த அழுத்தப்பரிசோதனை, தோல் வியாதி பரிசோதனை என்பனவும் நடை பெறும்.

இதில் தீவக மக்களை பங்குபற்றி பயன்பெறுமாறு தீவக லயன்ஸ் கழகத்தினர் கேட்டுள்ளனர்.

# அறிவுறுத்தல் கூட்டம்

யாழ்ப்பாணம் —

பாடசாலை மட்டக் கணிப்பீட்டு வேலைத்திட்டத்தை மேலும் திறம்பட நடத்திக் கொள்வதற்காக அதிபர்களுக்கும், கோட்டக் கல்விப் பணிப்பாளர்களுக்குமான ஒருநாள் அறிவுறுத்தல் கூட்டம் நாளை யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும் எனப் பரீட்சை ஆணையாளர்நாயகம் அறிவித்துள்ளார்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஆய்வு அபிவிருத்திக் கிளையினால் இந்தக் கூட்டம் நடத்தப்படவுள்ளது. யாழ். மாவட்டத்திலுள்ள ஐந்து கல்வி வலயங்களையும் சேர்ந்த சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களையும் கட்டாயம் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (122)

# ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான வாய்மொழி ஆங்கில வதிவிட செயலமர்வு

நெல்லியடி —

தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவையின் ஆதரவில் மருதங்கேணி கோட்டப் பாடசாலையில் கற்பிக்கும் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான செயற்பாடு சார்ந்த வாய் மொழி ஆங்கில வதிவிட செயலமர்வு நேற்று முன் தினம் ஆரம்பமாகியது.

இந்தச் செயலமர்வு நாளை வரை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற வுள்ளது.

இந்தச் செயலமர்வில் பருத்தித்துறை கோட்டப் பாடசாலைகளில் சுனாமியால் பாதிப்புக்குள்ளான பாடசாலையில் கற்பிக்கும் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களில் - இந்த ஆண்டு நடத்தப்பட்ட செயற்பாடு சார்ந்த வாய் மொழி செயலமர்வில் பங்குபற்றாதவர்கள், தற்போதைய செயலமர்வில் பங்குபற்றலாம் என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (12)

# புனர்வாழ்வு அபிவிருத்தி திட்டம் தொடர்பான மீளாய்வு கூட்டம்

யாழப்பாணம் —

நிவாரண புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சின் 'அபிவிருத்தித் திட்டம் -2005' இன் கீழ் செயற்படுத்தப்படுகின்ற வேலைத் திட்டங்கள் தொடர்பான மாதாந்த மீளாய்வு குழுக் கூட்டமும், 'அபிவிருத்தித் திட்டம் - 2006' இல் அமுல்படுத்தப்படவிருக்கும் வேலைத்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடலும் நாளை மறுதினம் காலை 10 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

அரச அதிபர் க.கணேஷ் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் அமைச்சின் உயர் அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளதால், இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் சகல நிறைவேற்று நிறுவனங்களின் அதிகாரிகளையும் தவறாது கலந்துகொள்ளுமாறு மாவட்டச்செயலக திட்டப்பணிப்பாளர் கேட்டுள்ளார்.

# அரியாலை கொட்டுக்கிணற்றடி, ஈச்சங்காடு பகுதி நெற்செய்கையாளர்களுடன் கலந்துரையாடல்

அரியாலை —

அரியாலை கிழக்கில் உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள கொட்டுக்கிணற்றடி, ஈச்சங்காடு ஆகிய பிரதேசங்களில் நெற்செய்கை மேற்கொள்ளவுள்ள விவசாயிகளுடனான கலந்துரையாடல் - நாளை பிற்பகல் 3.30 மணிக்கு அரியாலை சிறி பார்வதி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக அரியாலை விவசாய சம்மேளன தலைவர் தெரிவித்துள்ளார்.

கொட்டுக் கிணற்றடி, ஈச்சங்காடு ஆகிய இரு பிரதேசங்களும் உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்திருப்பதால், அந்தப் பிரதேசத்தில் விவசாயச் செய்கையை மேற்கொள்ளவுள்ள விவசாயிகளுக்கு விசேட அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் நெற்செய்கை ஆரம்பிப்பதற்கான காலம் நெருங்கிவிட்டதால், நெற்செய்கை மேற்கொள்ளவுள்ள விவசாயிகளுடன் இந்தப் பிரதேசங்களுக்குச் சென்று வரும் நடைமுறைகள் தொடர்பான பல்வேறு விடயங்கள் கலந்துரையாடவிருப்பதால், இந்தப் பகுதி நெற்செய்கையாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் நல்லூர்ப் பிரதேச செயலர், விவசாயத் திணைக்கள அதிகாரிகள், அரியாலை கிழக்கு கிராம சேவையாளர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# கண்காட்சி

யாழ்ப்பாணம் —

மகளிர் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்கில் வடக்கு - கிழக்கு கிராம அபிவிருத்தி திணைக்களத்தால் மாகாண மட்டத்தில் நடத்தப்படும் தையல், மனையியல் போன்றவற்றுக்கான மாபெரும் கண்காட்சி இன்றும், நாளையும் யாழ்.மத்திய கல்லூரியில் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறவுள்ளது. (12)

# காந்தியின் ஜெயந்தி தினமும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம் —

மகாத்மா காந்தி அடிகளின் 138 ஆவது ஜெயந்தி தினமும், சத்திய விஞ்ஞானம் நூல் வெளியீடும் ஒக்ரோபர் 2 ஆம் திகதி மாலை 3 மணிக்கு சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தத் தினத்தன்று காலை 10 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்னாலுள்ள காந்தியடிகளின் உருவச்சிலைக்கு காந்தியத் தொண்டர்களால் மலர்மாலை அணிவிக்கப்படும்.

மாலை இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ள நிகழ்வில் அஞ்சலி உரைகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஆவரங்கால் பிரதேசத்தில் அமெரிக்க மோப்பநாய்கள் கண்ணி வெடி அகற்றுவதற்கு பயன்படுத்தப்படுவதைப் படத்தில் காணலாம்.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை இரண்டு



பெயர் : பா.ஆர்த்திகா
முகவரி : அல்வாய்.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் : ----------
முகவரி : ----------
பிறந்த ஆண்டு : ----------

----------
பெற்றோர் ஒப்பம்

# சமுதாயத்தில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தும் முன்பள்ளி ஆசிரியர்கள்

## தமிழர் புனர்வாழ்வுக்கழகத் திட்டப் பணிப்பாளர்

கிளிநொச்சி

சமூகத்துக்குள் ஒரு நெருக்கத்தை ஏற்படுத்தி, அதனூடாக சமூக நடைமுறைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியவர்கள் முன்பள்ளி ஆசிரியர்களே என தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் திட்டப் பணிப்பாளர் லோரன்ஸ் கிறிஸ்ரி தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மூன்று நாள் செயலமர்வின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

இந்தப் பயிற்சியின் முடிவில் முன்பள்ளி ஆசிரியர்கள் சமூகச் செயற்பாடுகளில் விழிப்புணர்வுடன் செயற்படவேண்டும் எனவும்-சமூக பழக்கவழக்கங்களில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்த முன்பள்ளி ஆசிரியர்களினாலேயே முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

புலம்பெயர்ந்தவர்கள் தொடர்பான சர்வதேச அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி ரணசிங்க கருத்துத் தெரிவிக்கையில்-

எமது அமைப்பு இந்தியாவிலிருந்து மீளக் குடியேறிய மக்களுக்கு உதவிகளை வழங்கி வருகின்ற போதிலும், இவ்வாறு மீளக் குடியேறியுள்ள முன்பள்ளி மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்தும் பொருட்டு, வடக்கு - கிழக்கு முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்துடன் இணைந்து இந்த முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சித் திட்டத்தை ஆரம்பிக்க நிதியுதவி வழங்கியுள்ளது.

இதன் அடுத்த கட்டமாக ஏனைய மாவட்டங்களில் செயற்படுத்தியுள்ளது போன்று முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சைக்கிள்களை வழங்குவதற்கு எமது நிறுவனம் தீர்மானித்துள்ளது எனத் தெரிவித்தார்.

இந்தப் பயிற்சி புலம் பெயர்ந்தவர்கள் தொடர்பான சர்வதேச அமைப்பின் நிதியுதவியின் கீழ் வடக்கு - கிழக்கு முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சியில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 90 முன்பள்ளி முதன்மை ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் பாண்டியன், கிளிநொச்சி மேலதிக அரச அதிபர் வேதநாயகன், கரைச்சி பிரதேசசபை விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தன், அன்னை இல்லத்தின் இயக்குநர் அருட் தந்தை றெஜினோல்ட் அடி[illegible]ளார் ஆகியோர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

நேற்று ஆரம்பமாகிய இந்தப் பயிற்சிநெறி இன்றும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஆறுமுகத்தான்குளம் பிரதேசத்தில் திலீபன் மருத்துவசேவை சிறப்பு முகாம்

கிளிநொச்சி

தியாக தீபம் திலீபனின் 18 ஆம் ஆண்டு நினைவையொட்டி ஆறுமுகத்தான் குளத்தில் அளம்பில் தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினரின் சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது.

திலீபன் மருத்துவ சேவையினரின் ஒழுங்குபடுத்தலில் கடந்த செவ்வாய்க்கிழமை 10.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது.

அளம்பில் திலீபன் மருத்துவமனையின் அபிவிருத்திக் குழுத் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பொதுச் சுடரை வைத்திய கலாநிதி சிவபாலன் ஏற்றிவைத்தார்.

தமிழீழத் தேசியக் கொடியை சிறப்பு மருத்துவ போராளியும், திலீபன்மருத்துவ சேவையின் நிர்வாகப் பொறுப்பாளருமான புலிமறவன் ஏற்றி வைத்தார். திலீபனின் திருவுருவப்படத்துக்கான ஈகச்சுடரை வைத்தியகலாநிதி எழுமதி கரிகாலன் ஏற்றி வைக்க -

மலர்மாலையை வைத்திய கலாநிதி வவுசர் அணிவித்தார். தொடர்ந்து மலர் வணக்கத்தை சிறப்பு மருத்துவப் போராளி சுதர்சன் ஆரம்பித்து வைத்தார்.

நோய்கள் எவ்வாறு ஏற்படுகின்றன, அவற்றை எவ்வாறு கட்டுப்படுத்துவது போன்ற விடயங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. கண்காட்சி மண்டபத்தை வைத்திய கலாநிதி எழுமதி கரிகாலன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

தொடாந்து மருத்துவ சேவைகள் நடைபெற்றன. இதில் எல்லாவித நோய்களுக்கான மருத்துவ ஆலோசனைகளும், மருத்துவ சிகிச்சையும் அளிக்கப்பட்டன.

இந்த மருத்துவ முகாமில் பெருமளவான மக்கள் பயன் பெற்றனர்.

# காலச் சுவட்டில்...

## இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

### செப்ரெம்பர் - 24

**1859:** ஒரு நாட்டு கிரிக்கெற் அணி இன்னுமொரு நாட்டுக்குச் சென்று கிரிக்கெற் பந்தயத்தில் கலந்துகொள்வது முதன் முதல் நடைமுறைக்கு வந்தது. கனடா அணிக்கும், அமெரிக்க அணிக்கும் இடையிலான போட்டி மொன்ட்ரியல் நகரில் நடைபெற்றது.

**1910:** விமானம் மூலம் எதிரி நடமாட்டங்களைக் கண்காணிக்க விமானக் கண்காணிப்பு ஒத்திகை முதன்முதலாக பிரிட் டனில் சாலிஸ்பரியில் நடந்தது.

**1917:** பிரிட்டிஸ் விமானப் படையைச் சேர்ந்த ஐந்துபோர் விமானங்கள் ஒரே சமயத்தில் தரையில் விழுந்து நொறுங்கின.

**✷ :** அமெரிக்காவில் சோஷலிசக் கட்சி கலைக்கப்பட்டதாக அந்தக் கட்சியே அறிவித்தது.

**1960:** அணு விசையால் இயங்கும் விமானம் தாங்கிக் கப்பல் யு.எஸ்.எஸ் எண்டர்பிரைஸ் கடலில் மிதக்கவிடப்பட்டது.

**1966:** கரீபியன் பகுதிகளில் அடித்த இனெஸ் சூறாவளியால் ஹெயிட்டி, கியூபா, டொமினிக்கன் குடியரசு முதலான இடங்களில் 2500இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். 29ஆம் திகதி வரை தொடர்ந்து ஐந்து நாட்கள் வீசிய இந்தச் சூறாவளியால் பத்துக்கோடி டொலர் பெறுமதியுள்ள சொத்துக்கள் முற்றாக அழிந்தன.

**1975:** பிரிட்டிஸ்ஸைச் சேர்ந்த டக்ளஸ் ஹாஸ்டன், டக் ஸ்காட் என்ற இருவரும் செங்குத்தான தென்மேற்குப் பகுதி மூலம் எவரெஸ்ட் சிகரத்தைச் சென்றடைந்தனர்.

**1976:** அமெரிக்க வெளிநாட்டமைச்சர் ஹென்றி கிஸ்ஸிங்கர் திட்டப்படி உடனடியாகவே ரொடீசியாவில் இரு இன அரசு அமைக்க அதன் பிரதமர் அயன் சிமித் உடன்பட்டார். அத்துடன் இரு ஆண்டுகளுக்கு கறுப்பு இன மக்களுக்கு ஆட்சியில் பெரும்பான்மை வழங்கவும் உடன்பட்டார்.

**1977:** ரொடீசியாவில் கறுப்பு இனத்தவர்களுக்கு ஆட்சியில் பெரும் பங்கு கொடுக்கும் அமெரிக்த் திட்டத்துக்கு அங்கோலா, போட்ஸ்வானா, மொஸாம்பிக், ஸாம்பியா, டான்ஸானியா ஆகிய நாடுகள் ஆதரவு தெரிவித்தன.

**1987:** பீட்டர் ரைட் என்பவர் எழுதிய ஸ்பை காட்சர் என்ற நூலை பிரிட்டிஷ் அரசு தடை செய்தது. பின்னர் இதனை உச்ச நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் என்பனவும் இத்தடையை உறுதிசெய்தன.

**1992:** இந்தியா தனது நாட்டிலேயே வடிவமைத்துத் தயாரிக்கப்பட்ட விமானி இல்லாமலேயே இலக்கு நோக்கிப் பறக்கக் கூடிய லட்ஷியா என்னும் விமானத்தின் வெள்ளோட்டத்தை வெற்றிகரமாக நடத்தியதாக அறிவித்தது.

**1993:** ஜோர்ஜியா நாட்டு விமானம் ஒன்று ஏவுகணை ஒன்றால் தாக்கப்பட்டு நொறுங்கி விழுந்தது. இதில் பயணம் செய்து கொண்டிருந்த எண்பது வீரர்கள் பலியாகினர்.

தொகுப்பு - சந்துரு

# மாவடிக் கிராமத்தில் பயனாளிகளுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன!

கிளிநொச்சி

தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடனும் போரூட் நிறுவனத்தின் நிதியுதவியுடனும் கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தால் மாவடிக் கிராமத்தில் 20 பயனாளிகளுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சி கிழக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழக நிறுவனத்தில் நிர்வாக அலுவலர் ப.புஸ்பகுமாரி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மரக்கன்றுகள் தொடர்பான கருத்துரைகளை கிளிநொச்சி கிழக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழக உதவிப் பணிப்பாளர் நவநீதன் நிகழ்த்தினார்.

போரூட் பிரதிநிதியாக கலந்துகொண்ட வாணியும் கருத்துக்களை வழங்கினார்.

மரக்கன்றுகளை கிளிநொச்சி கிழக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழக உதவிப்பணிப்பாளர் நவநீதன் பயனாளிகளுக்கு மரக்கன்று வழங்குவதை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து போரூட் நிறுவன பிரதிநிதியான வாணி பயணாளிகளுக்கு மரக்கன்றுகளை வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் ஒரு பயனாளிக்கு - தென்னை, பலா, மா, தோடை, தேசி போன்ற மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. (இ)

# கலை இலக்கிய விழா

ஆழியவளை

வடமராட்சி கிழக்கு கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் கலை, இலக்கிய விழா இன்று உடுத்துறை மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது என மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார் (122)

# சமுதாய அபிவிருத்தித்திட்ட அறிமுக நிகழ்வும் முன்பள்ளிக்கான அடிக்கல் நாட்டு விழாவும்!



கிளிநொச்சி

கிளிநொச்சி-பூநகரிப் பிரதேசத்திலுள்ள நெற்புலவுக் கிராமத்தில் சமுதாய அபிவிருத்தித் திட்ட அறிமுக நிகழ்வு ஒன்றை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் ஆரம்பித்துள்ளது.

நெற்புலவுக் கிராமத் தலைவர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், மங்கள விளக்கேற்றப்பட்டதை அடுத்து, தேசியக் கொடி, தமிழர் புனர்வாழ்வுக்கழகக்கொடி என்பனவும் ஏற்றிவைக்கப்பட்டன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதிப் பங்களிப்புடன், போரால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டத்தின்கீழ் முன்பள்ளிக்கான அடிக்கல் நாட்டுவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

அடிக்கல்லை பூநகரிப் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் அமுதன், தமிழர் புனர்வாழ்வுக்கழக வடகிழக்கு சமுதாய, மீள்கட்டமைப்புத் திட்டப் பணிப்பாளர்களில் ஒருவரான சுடர், கிராம இணைப்பாளர்களான தாரங்கி, வரதா ஆகியோர் நாட்டிவைத்தனர்.

இந்த நிகழ்வில் கருத்துரைகளை சுடர், அமுதன் ஆகியோரும், நன்றியுரையை கிராம சேவையாளர் மாசிலாமணியும் நிகழ்த்தினர்.